# நீங்கள் தாழ்ச்சியடைவதில்லை



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர் M.A., D.D.,

# நீங்கள் தாழ்ச்சியடைவதில்லை



திருமறை அறிஞர்

**Rev. Dr. A. கிறிஸ்டோபர்**

விண்ணக அப்பம்,

2, நேரு வீதி, சூரம்பட்டி, ஈரோடு - 9.



| | | |
|---|---|---|
| FIRST EDITION | - | JUNE - 2001 |
| RE-EDITION | - | JULY - 2011 |
| TOTAL COPIES | - | 2000 |
| COPY RIGHT | - | TO AUTHOR |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T 41 |

**FOR DETAILS CONTACT**

**WINNAGA APPAM**

**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**

**ERODE - 638 009. S.INDIA.**

**PHONE/ Fax : (0424) 2277286**

**e-mail : erodeipa@yahoo.com**

**website : www.erodeipa.org**

**Bank A/c : ALEX DHINAKARAN.C**

**Bank of India (Erode Branch)**

**A/c No : 820210100005638**

# அணிந்துரை

திருமறைப் பெரியார்
Rev.Dr.**யோபு ஞானப்பிரகாசம்**
தலைவர் & ஸ்தாபகர்
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோவை – 18. தென் இந்தியா.

கிறிஸ்துவுக்குள் அன்பான தெய்வ மக்களுக்கு ஆண்டவரின் நாமத்தில் அன்பையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆவிக்குரிய வட்டாரத்தில் நன்கு அறிமுகமான பாஸ்டர். கிறிஸ்டோபர் அவர்களின் எழுத்து பல்லாயிரக்கணக்கான மக்களை உயிர்ப்பித்து உருவாக்கி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

கருகலான வசனங்களை மிக எளிமையாக விளக்கி புரியும்படி எழுதுகிற இவர் மிக எளிமையான வேத வசனங்களின் ஆழத்தில் இருக்கும் கருகலான சத்தியங்களை மக்கள் அறியும்படி விவரித்து எழுதக்கூடிய தாலந்தைப் பெற்றவர்.

இவரின் எல்லா புத்தகங்களையும் மிகுந்த ஆவலுடன் வாசிக்கிற எனக்கு இவரது எழுத்து நடையைக் குறித்தும். நகைச்சுவையான உதாரணங்களைக் குறித்தும் மிகுந்த ஆச்சரியம் உண்டாயிருக்கிறது. எங்களின் உடன் ஊழியரும் சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள எங்கள் சபைகளுக்கான கண்காணிப்பாளருமாகிய இவர் சிறந்த போதகர், எழுத்தாளர் என்பது மட்டுமல்ல மிகச்சிறந்த கன்வென்ஷன் பிரசங்கியுமாவார்.

இருபத்து மூன்றாம் சங்கீதத்தை மையமாக வைத்துக் கொண்டு மிக விசாலமாக, விளக்கமாக, விசுவாச வார்த்தைகளை அள்ளித்தந்திருக்கிறார். இவ்வளவு சங்கதிகளை இந்த சங்கீதம் அடக்கியுள்ளதா? என்ற கேள்வி இந்த புத்தகத்தை வாசிக்கிற ஒவ்வொருவருக்கும் எழும்பும் என்பது உண்மை.

திருமறை அறிஞர் டாக்டர். அ.கிறிஸ்டோபர் அவர்களையும், அவரது இலக்கிய ஊழியங்களையும் இதை வாசிக்கிற உங்களையும் கர்த்தர் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக.



# என்னிடமிருந்து

என் இனிய வாசகர்களே!

இந்த நூலின் மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நான் நடைபயின்ற நாள் முதல் என் நாவில் உச்சரித்துக் கொண்டிருக்கும் இருபத்து மூன்றாம் சங்கீதம் இன்னும் புதிதாகவே என்னுள் இருக்கிறது. புதிதாக மாத்திரமல்ல புதிராகவும் இருக்கிறது.

சிந்திக்க. சிந்திக்க என் ஆண்டவரைக் குறித்த அறிவும் அவர் எனக்கு வைத்திருக்கிற ஆசீர்வாதங்களின் அளவும் விரிந்து கொண்டே போகிறது.

திருக்குறளைக் குறித்து சொல்லும் பொழுது கடுகைத் துளைத்து குறுகத்தறித்த குறள் என்று சொல்லுவார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் அனுவைத் துளைத்து அதனுள் அகிலத்தை அடக்கினாற்போல ஆறே வசனங்களில் யாவே தெய்வத்தின் அனைத்து மகிமைகளையும் அடைத்து வைத்திருக்கிற சங்கீதம் இந்த இருபத்து மூன்றாம் சங்கீதம்.

சந்தனத்தை இழைக்க இழைக்க மணம் வருவது போல இந்த சங்கீதத்தை வாசிக்க வாசிக்க கிருபை பெருகும். யோசிக்க யோசிக்க திருப்பங்கள் நிகழும் என்பது உண்மை.

இந்த சங்கீதம் எனக்குள் ஏற்படுத்திய பாதிப்பை விளக்கி இந்த பதிப்பை உங்கள் கரங்களில் தருகிறேன். இருக்கிறவராகவே இருக்கிறவர் உங்களோடு இருப்பாராக.

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் இலக்கியப் பணியில்,
**அ.கிறிஸ்டோபர்**.

# படைக்கிறேன்

**அ**ன்பரே நீர் என் மேய்ப்பர்!

**ஆ**தலால் குறைவொன்றும் எனக்கில்லை,

**இ**துதான் என் தேவை என்றறிந்து!

**ஈ**வாய் புல்நீர் தருகின்றீர்,

**உ**யிர் பறிக்கும் பள்ளம் வந்தாலும்,

**ஊ**டே நடக்க உடன் இருப்பீர்,

**எ**ன் தலையை எண்ணையால் அபிஷேகித்து,

**ஏ**ற்படுத்தினீர் வெற்றி விழா நேர்த்தியாக

**ஐ**சுவரியத்தால் வழிகிறது என் பாத்திரம்

**ஒ**ருநாளும் விலகாமல் உம் வீட்டில்

**ஓ**யாமல் துதிபாடி மகிழ்ந்திருப்பேன்.

**ஔ**ஷதமாய் அனைவருக்கும் மாறிடவே

இஃதினை உமக்குப் படைக்கிறேன்.

இவண்

**அ.கிறிஸ்டோபர்.**



**உள்ளே...**


1 பாடு தந்த பாட்டு

2 மேய்க்கும் கர்த்தர்

3 போஷிக்கும் கர்த்தர்

4 தேற்றும் கர்த்தர்

5 பரிகாரியாகிய கர்த்தர்

6 வெற்றி தரும் கர்த்தர்

7 கூடவே இருக்கும் கர்த்தர்

# 1. பாடு தந்த பாட்டு

வேதத்தில் இருக்கிற அறுபத்தாறு ஆகமங்களில் தனக்கான தனிச்சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிற ஆகமம் சங்கீத புஸ்தகம்.

எக்காலத்திலும், எவ்விடத்திலும், எந்நிலையிலும் எல்லா வயதினரும் விரும்பி வாசிக்கக் கூடிய வேதப்பகுதியே சங்கீத புஸ்தகம்.

விருந்து வீடானாலும், விவாக மேடையானாலும், துக்க நேரமானாலும், துதி வேளையானாலும், விபத்தானாலும், வியாதி நேரமானாலும், மறக்காமல் மனனமா– சொல்லக்கூடிய வேத பகுதி சங்கீதமாகும்.

பல்வேறு பக்தர்கள், பல்வேறு இடங்களில் பல்வேறு சூழ்நிலைகளில். பல்வேறு கருத்துக்களில் பாடப்பட்ட பக்திப்பாடல்களின் தொகுப்பே சங்கீத புத்தகமாகும்.

மூல மொழியிலும் சரி. மொழிபெயர்ப்பு வேளையிலும் சரி. இது கவிதை நடையிலேயே பதிவு செ–யப்பட்டிருப்பதினால், இவ்வாகமத்தில் உள்ள 150 பிரிவுகளை அதிகாரங்கள் என்று சொல்லாமல் 150 பாடல்கள் என்றே சொல்ல வேண்டும்.

இந்த சங்கீதங்களில் பலவற்றை தாவீது பாடி இருக்கிறார். சிலவற்றை அவர் குமாரனாகிய சாலமோன் பாடியிருக்கிறார். இன்னும் சிலவற்றை தாவீதின் பிரதான இசைக் கலைஞனாகிய ஆசாப் பாடியிருக்கிறார். மேலும், சில சங்கீதங்களை கர்த்தருடைய தாசனாகிய மோசேயும். லேவிக் கோத்திரத்தில் ஒரு கூட்டமாகிய கோராகின் புத்திரரும் பாடி இருக்கிறார்கள்.

இந்த நூற்றைம்பது சங்கீதங்களில் தாவீது பாடின சங்கீதங்களை வாசித்தபொழுது என் ஆவி புத்துணர்ச்சி



பெற்றது மட்டுமின்றி என் ஆன்மா என் இரட்சகருக்குள் களிக்கூர்ந்து மகிழ்ந்தது.

சில சங்கீதங்களை அரண்மனையிலிருந்தும், சில சங்கீதங்களை ஆலயப் பிரகாரங்களிலிருந்தும் அவன் பாடியிருக்கிறான். வனாந்திரத்தில் பிறந்த சங்கீதமும் உண்டு. வழியோரத்தில் பிறந்த சங்கீதமும் உண்டு.

இதிலே தீர்க்கதரிசனமும் உண்டு, திட்டமான வாழ்வியல் சத்தியமும் உண்டு. தீமையைச் சகிக்கும் தீர வார்த்தைகள் உண்டு. தித்திக்கும் வேத வார்த்தையின் மேன்மைகளும் உண்டு.

இப்படி வாக்குத்தத்த பெட்டகமாகவும் வாழ்வியல் தத்துவங்களின் ஊற்றாக விளங்குகிற இந்த சங்கீதங்களின் புத்தகத்திற்காக என் தேவனை நன்றியோடு ஸ்தோத் தரிக்கிறேன்.

கண்ணீரில் பிறந்த சங்கீதமும் உண்டு, களிப்பில் பிறந்த சங்கீதமும் உண்டு, வெற்றியின் போது பிறந்த சங்கீதங்கள் உண்டு, வெறுமையில் பிறந்த சங்கீதமும் உண்டு, இப்படித்தன் வாழ்க்கையின் சகல நிலைகளிலும் தேவனைத்தேடி அவர் பிரசன்னத்திற்குள் ஓடி அவர் கிருபையை நாடி தன் உள எண்ணங்களை பாடலா–ப்பாடி தாவீது தந்திருக்கிற இந்த சங்கீதங்கள் உணர்வடையச் செ–பவைகள், ஊக்கம் தருபவை கள், உயிரூட்டக்கூடியவைகள்.

என் இளவயது துவங்கி இன்று வரை நான் நேசித்து வாசித்து மகிழ்கிற சங்கீதங்களில் பிரதானமானது இருபத்து மூன்றாவது சங்கீதமாகும்.

பொதுவாக வேதவசனம் எல்லோருடைய பசியையும் போக்கும் என்பார்கள். ஆனால் என் இளம் பிராயத்தில் என்னைப் பட்டினியில் இருக்க வைத்தப் பெருமை இந்த

இருபத்து மூன்றாவது சங்கீதத்தையே சாரும். ஆச்சரியமா– இருக்கிறதா? ஆகிலும் அது உண்மை.

நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததினால் இருபத்து மூன்றாவது சங்கீதத்தை படித்து ஒப்புவித்தால்தான் சாப்பாடு என்று என் தாயார் கட்டளை போட்ட நாட்கள் உண்டு. அப்போது இருந்த அறிவில் இந்த சிறிய சங்கீதத்தை மனனம் செ–வது என்பது மலையை விழுங்குவது போலிருந்தது.

இப்படி பட்டினிக்குப் பயந்து படித்து மனனம் செ–த சங்கீதம்தான் இருபத்து மூன்றாவது சங்கீதம்.

ஒவ்வொரு சங்கீதத்திற்கும் ஒவ்வொரு பின்னணி உண்டு. அதைப்புரிந்து கொண்டால் தான் அந்த குறிப்பிட்ட சங்கீதத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளின் முழுமையான அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியும்.

கர்த்தர் என் மே–ப்பரா– இருக்கிறார் என்று இச்சங்கீதம் துவங்குவதினாலே ஓகோ தாவீது மே–ப்பனாக இருக்கும் பொழுது பாடின சங்கீதம் என்று சொல்லி இதற்கு மே–ப்பனின் சங்கீதம் என்று பெயர் வைத்து விட்டார்கள்.

தாவீது மே–ப்பனாக மாத்திரமா இருந்தார்? மே–ப்பனா– இருந்தவர் கோலியாத்தை வெல்லுகிற போர் வீரனாக இருந்தார். போரில் வென்ற பிறகு, சேனைத்தலைவன் ஆனார். அதன் பிறகு சவுலின் மருமகன் ஆனார். அதன் பிறகு யூதாவுக்கு ராஜாவானார் அதன் பிறகு சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவானார்.

இப்படி, மே–ப்பனா– இருந்தது முதல் மகாராஜாவா– வந்தது வரை உள்ள வாழ்க்கையின் பல்வேறு வளர்ச்சிகளில் எப்பொழுது இந்த சங்கீதத்தைப் பாடினார் என்று நீங்கள் யோசித்தது உண்டா? அதை முதற்கண் அறிவீர்களானால் இந்த சங்கீதத்தை விட்டு பிரிய மாட்டீர்கள். பின்னிப் பிணைந்து விடுவீர்கள்.



தாவீது ராஜாவா– இருந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சியின் காரணமாக அவருடைய மகன் அப்சலோமினால், ஆட்சியை விட்டு விரட்டப்பட்டு அரண்மனையை விட்டு துரத்தப்பட்டு, அழுகையோடு வனாந்திரத்தில் அலைந்து திரிந்தார்.

இப்படிப்பட்ட வேளையில்தான் கடந்த கால நினைவு அவருக்கு வருகிறது. இதே வனாந்திரத்தில் ஆடுகளை மே–த்த காலத்தில் அவைகளை போஷித்து அவைகளை எப்படி காப்பாற்றினோம் என்பதை சிந்திக்கிறபொழுது, அவருடைய உள்ளத்தில் விசாரம் மறைந்து, விசுவாசம் பிறக்கிறது.

மனிதனாகிய நானே என் ஆடுகளுக்கு இப்படிச் செ–தது உண்டானால், என் தேவன் எனக்கு எவ்வளவு அதிகம் செ–வார் என்ற விசாலமான சிந்தை பிறந்ததினால், தன்னை ஒரு ஆடாகவும், தன் ஆண்டவரை ஒரு மே–ப்பனாகவும் உருவகப் படுத்திக் கொண்டு பாடிய விசுவாச அறிக்கையே இந்த இருபத்து மூன்றாவது சங்கீதமாகும்.

இந்த சங்கீதத்தில் ஆறே வசனங்கள் உண்டு, இந்த ஆறு வசனங்களிலும், நம்முடைய ஆண்டவர் நமக்கு எப்படி? யாரா–? இருக்கிறார் என்பதை வெகு அழகாக படம் பிடித்து காட்டியுள்ளார்.

கடந்த நாட்களில் என்னுடைய சபையாரிடத்தில் இக்காரியங்களை விளக்கினபொழுது அநேகர் ஆச்சரியப் பட்டனர்–ஆசீர்வதிக்கப்பட்டனர்.

ஆடியோவிலும், வீடியோவிலும் இச்செ–திப் பதிவை கண்டும், கேட்டும், அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டதினால் அருமை இரட்சகரின் அற்புதமான ஈவுகளை உங்களோடு இந்நூலில் நான் பகிர்ந்து கொள்கிறேன்.

# 2. மே–க்கும் கர்த்தர்

கர்த்தர் என் மே–ப்பரா– இருக்கிறார் என்று எவ்வளவு அழகாக இச்சங்கீதம் துவங்குவதைப் பாருங்கள். நம்முடைய ஆண்டவர் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தரும், தேவாதி தேவனுமா– இருக்கிறார் என்பதைவிட அவர் நமக்கு மே–ப்பரா– இருக்கிறார் என்பது நமக்கு அருளப்பட்டிருக்கிற மிகப் பெரிய சிலாக்கியமாகும்.

நம்முடைய அருள் நாதர் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு தன்னை வெளிப்படுத்தின பொழுது நானே நல்ல மே–ப்பன் என்று சொன்னதையும், அவர் திரளான ஜனங்களைப் பார்த்து மே–ப்பன் இல்லாத ஆடுகளைப்போல அவர்கள் இருப்பதைக் கண்டு அவர்கள் மேல் மனதுருகினதையும் கவனித்துப் பாருங்கள்.

இந்த நூலை வாசிக்கிற தேவப்பிள்ளையே ஆண்டவர் இயேசு மே–ப்பராக இருக்கிறபடியால் உங்களுக்கு குறை ஒன்றும் இல்லை என்பதை அறியுங்கள். தற்போது குறைவுகள் போல் ஏதாகிலும் உங்கள் கண்முன் தெரிந்தால், அவைகள் நிரந்தரமானவைகள் அல்ல, நில்லாமல் ஓடிப்போகும் என்று சொல்லி, துள்ளிக் குதியுங்கள்.

நல்ல மே–ப்பனுக்குரிய லட்சணம் எவைகள் என்று நான் என் சொந்தத்திலிருந்து சொல்லாமல், நம்முடைய இரட்சகர் சொன்ன வார்த்தைகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நல்ல மே–ப்பன் தன் ஆடுகளுக்கு முன்னே செல்லுகிறான் (யோவா 10:4) நம்ம ஊர் மே–ப்பருக்கும், நமது ஆண்டவருக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தைப் பாருங்கள்.



நமது ஊர் மே–ப்பர், ஆடுகளை முன்னே போகவிட்டு பின்னே நடந்து போகிறார். ஆடுகளை ஓட்டிக்கொண்டு போகிறார் என்பதை விட விரட்டிக்கொண்டு போகிறார் என்பதே சரியாக இருக்கும்.

எதிர்பாராத விதமாக எதிரிகளோ கொடிய விலங்கினமோ, எதிர்பட்டால் முதலில் பிடிபடுவதும், கடிபடுவதும், அடிபடுவதும் இந்த அப்பாவி ஆடுகளே. அவைகளுக்கு பின்னால் வருகிற மே–ப்பர் இந்நிலையைக் கண்டு, தான் தப்பித்தால் போதும் என்று தலைதெறிக்க ஓடிவிடுகிறார்.

ஆஹா! நமக்கு எவ்வளவு நல்ல மே–ப்பர் பார்த்தீர்களா! அவர் நமக்குப் பின் அல்ல நமக்கு முன்னே நடந்து போவது எவ்வளவு பெரிய பாக்கியம். அவர் நமக்கு முன்னே செல்வதினால் அனைத்தும் சாத்தியம் என்பது சத்தியம். இதை நினைவில் வையுங்கள்.

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கு முன்பாகவும், கர்த்தர் முன்னே செல்கிறார் என்பதை உணர்ந்து உவகை கொள்ளுங்கள். அவர் அல்லது அவரின் பிரசன்னம் நமக்கு முன்னே கடந்து போகிறதினால் என்ன கிடைக்கும் தெரியுமா? தொடர்ந்து வாசியுங்கள்.

நான் உனக்கு முன்னே போ– கோணலானதை செவ்வையாக்குவேன் (ஏசா45:2) ஆம்! தேவன் நமக்கு முன்னே செல்வாரானால் கோணலானவைகளை நேராக்குகிறார்.

வேதத்தில் உள்ள இன்னொரு வசனத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தேவன் கோணலாக்கியதை நேராக்கத்தக்கவன் யார்? (பிர 7:13) ஆம்! தேவன் ஒரு

காரியத்தை கோணலாக்கி இருப்பாரானால் சட்டத்தைக் கொண்டோ, நூதன திட்டத்தைக் கொண்டோ எவராலும் நேராக்க முடியாது. அவர் நமக்கு முன்னே செல்வாரானால் கோணலானவை அனைத்தும் நேராகிவிடும் என்பதே உண்மை. மறுபடியும் எவர் நினைத்தாலும் அது கோணலாகாது என்பது அதைவிட உண்மை.

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கதை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது. அதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நா– வாலை நிமிர்த்த முடியுமா என்று இருவருக்குள் தர்க்கம் ஏற்பட நிமிர்த்திக்காட்டுகிறேன் என்று ஒருவர் போட்டியில் குதித்து விட்டார். நா– ஒன்றின் வளைந்த வாலை இரும்புக் குழலோடு இணைத்து நேராக்கி கட்டு போட்டு விட்டார். நாயை ஓர் அறைக்குள் வைத்து பூட்டி விட்டார்கள்.

இரண்டு மூன்று தினங்கள் கடந்தது. இப்பொழுது நான் போ– அந்தக் கட்டை அவிழ்த்து விட போகிறேன். அப்பொழுது நேராக நிற்கப் போகிறது பார் என்று மீசையை முறுக்கிக் கொண்டு அந்நா– இருக்கும் இடத்திற்குச் சென்றார்.

அங்கே அவர்களுக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஏற்பட்டது. காரணம் என்ன தெரியுமா? நா– வால் நிமிரவில்லை. மாறாக வாலோடு இணைக்கப்பட்ட இரும்புக்குழா– வால்போல் வளைந்து விட்டது. அட நா–வாலை நிமிர்த்த முடியாதப்பா என்று தலையில் அடித்துக் கொண்டு போ–விட்டார்கள். ஆம்! தேவன் கோணலாக்கினதை தேவனைத் தவிர வேறு எவராலும் நேராக்க முடியாது.

எனக்கன்பானவர்களே! இப்பொழுது நான் சொல்லுகிற வார்த்தை உங்களில் ஒரு சிலருக்கு தேவன் சொல்லுகிற



தீர்க்கதரினவார்த்தை. என் மே–ப்பராகிய கிறிஸ்து எனக்கு முன்னே செல்வதினால் என் வாழ்வில் கோணலா– இருக்குகிறவைகள் நேராகும் என்று விசுவாசியுங்கள்.

இயேசு ராஜா முன்னே செல்கிறார், ஓசன்னா கீதம் பாடுவேன் என்று எக்காளம் போல் சத்தம் உயர்த்திப்பாடுங்கள்.

உங்கள் கணவன் அல்லது மனைவியின் வாழ்க்கை கோணலா– இருக்கிறதா? உங்கள் மகன், அல்லது மகள் வாழ்க்கை கோணலா– இருக்கிறதா? உங்கள் தொழில் அல்லது வணிகம் கோணலா– இருக்கிறதா? நீங்கள் எடுத்த முயற்சிகள் பலனளிக்காமல் பாழா–ப் போனதா, நொந்து, வெந்து, தடுமாறி நிற்கிறீர்களா?

கவலையை விடுங்கள் நம்முடைய ஆண்டவர் நமக்கு முன்னே செல்கிறார். எல்லா கோணலையும் இன்னும் சில நாட்களில் நேராக்கப் போகிறார் அவர் சொல்ல ஆகும் ஆம்! அவர் கட்டளையிட நேராகும், நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

மேலும் கவனியுங்கள் நமக்கு முன்னே ஆண்டவர் போவதினால் கிடைக்கும் மிகப்பெரிய நன்மைகள் என்ன தெரியுமா? மீண்டும் வசனத்தை கவனித்துப் பாருங்கள், இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து வெண்கலக் கதவுகளை உடைத்து பொக்கிஷங்களையும் புதையல்களையும் தருகிறார். (ஏசா. 45 : 4)

உங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான ஆசிர் வாதங்கள், நியாயமான பங்குகள் உங்களுக்கு இதுவரை கிடைக்காமல் போயிருக்கலாம் கிடைக்கவே கிடைக்காது என்று கூட முடிவு செ–திருக்கலாம். ஆனால் நம்முடைய ஆண்டவர் அடைக்கப்பட்ட ஆசீர்வாதங்களையும் புதைக்கப்

பட்ட உச்சிதங்களையும் உங்களுக்குத் தரப்போகிறார் என்பதே உண்மை.

நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகள் ஏறிகால்கள் வீங்கியிருக்கலாம். நீதி கிடைக்காதோ என்று அழுது கண்கள் வீங்கியிருக்கலாம். பிரியமானவர்களே! உங்கள் விசுவாசத்தை கொஞ்சம் கட்டவிழ்த்து விடுங்கள். நம்முடைய ஆண்டவர் யார் தெரியுமா? **ஒருவரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவர்.** அவர் திறக்கும் பொழுதே கதவுகளை உடைத்து விடுகிறார். தாழ்ப்பாள்களை முறித்து விடுகிறார். அதாவது திரும்ப எவரும் பூட்டக் கூடாத படிக்கு தாழ்ப்பாளும், கதவும் இல்லாத திறந்த வாசலை நமக்கு அவர் உண்டாக்கித் தருகிறார்.

சில வேளைகளில் நம்முடைய விசுவாசம் ஒரு வட்டத்திற்குள் நின்று விடுகிறது. தேவனுடைய அதிசய நடத்துதல்களையும், செயல்களையும் நம்பத் தவறிவிடுகிறோம். யாத்திராகமம் (23 : 20) ஐ வாசித்துப் பாருங்கள். வழியிலே உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தமாக்கின ஸ்தானத்திற்கு உன்னை கொண்டு போ– சேர்க்கிறதற்கும் என் தூதனானவரை உனக்கு முன்னே அனுப்புகிறேன் என்ற வசனத்தை சிந்தித்துப் பாருங்கள். நம்மை அழைத்தவர், நடுவழியில் விடுகிறவர் அல்ல, வழியிலே நம்மைக் காக்கிறவர். உங்களுடைய எந்தவித பாதக சூழ்நிலையைக் குறித்தும் நீங்கள் கலங்கக் கூடாது. கர்த்தரின் தூதனானவர் உங்களுக்கு முன்னே போகிறார் என்பதை கவனத்தில் வையுங்கள்.

தானியேலை சிங்கக் கெபியில் போட்டார்களே அவரது தோழர்களை அக்கினி சூளையில் வீசினார்களே அவர்கள் அழிந்தா போனார்கள். அல்லது அவர்கள் அழுதா



அலறினார்கள். இல்லவே இல்லை, சோர்வில்லாமல் சொக்கத் தங்கமாக சோதனையில் இருந்து வெளியே வந்தார்கள்.

அப்படி ஏன் அவர்களுக்கு நடந்தது தெரியுமா? தங்களை வழியிலே காப்பதற்கு கர்த்தருடைய தூதனானவர் தங்களுக்கு முன்னே செல்கிறார் என்பதை திட்டமா– அறிந்திருந்தார்கள். தீர்க்கமா– விசுவாசித்தவர்கள். எனவே அவர்கள் சேதப்பட வில்லை என்பது தான் உண்மை.

அரசியல் முகமூடிகளையும், ஆன்மிகப் போர்வையையும், சமுதாயப் பணி என்னும் சால்வையையும் போர்த்திக் கொண்டு சதி செ–ய சாரசாரையா– எவர் எழும்பினாலும், உங்களை ஒருவராலும் சேதப்படுத்த முடியாது என்பதை அழுத்தமாக கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

இஸ்ரவேலே நீ பாக்கியவான், கர்த்தரால் மீட்கப்பட்ட ஜனமே உனக்கு ஒப்பானவன் யார், **அவரே உனக்கு கேடகமும் மகிமை பொருந்திய பட்டயமுமா– இருக்கிறார்** (உபா. 33 : 29) என்ற வசனத்தை நினைக்கும் பொழுது என் உள்ளம் துள்ளுகிறது துதிக்கிறது.

மட்டுமா? நீங்கள் படித்தது ஒன்றாக இருக்கலாம். பணி வேறொன்றாக இருக்கலாம். உழைப்பு ஒன்றாக இருக்கலாம். ஊதியம் வேறொன்றாக இருக்கலாம். நான் குதிப்பதற்கு முன்பாக வேறெருவன் குதித்து சுகம் பெற்று விடுகிறானே என்று பெதஸ்தா குளக்கரை திமிர்வாதக்காரனைப் போல பதவி உயர்வை பறிகொடுத்து விட்டு பரிதாபமாக பலமுறை பரிதபித்து இருக்கலாம். வசனத்தை சரியா– கவனித்துப் பாருங்கள்

**நான் ஆயத்தமாக்கின ஸ்தானத்திற்கு** உன்னை கொண்டுபோ– சேர்ப்பதற்கு என் தூதனானவரை உனக்கு முன்னே அனுப்புகிறேன். உங்களை உயர்த்த தேவன்

என்னென்ன திட்டம் வைத்திருக்கிறரோ, எந்த ஸ்தானத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறாரோ (Place and Position) அதிலே உங்களைக் கொண்டு போ– அமர்த்துவது அவருடைய வேலை அது அவருக்கு லேசான காரியம்.

மோசேயை நைல் நதியால் அழிக்க முடியவில்லை. இது எபிரேய குழந்தை என்று தெரிந்தும் எகிப்திய வாசிகளால் அதை அழிக்க முடியவில்லை, ஏற்ற நேரத்தில் இஸ்ரவேலின் இரட்சகனாக தனது ஸ்தானத்தை அடைகிற வரைக்கும் நல்ல மே–யப்பன் அவனுக்கு முன்னே போனார் வல்ல தூதனானவர் அவனைக் காத்துக் கொண்டார்.

தானோ அந்நிய தேசத்தில் ஒரு பரதேசி தனக்கோ, தா–தகப்பனில்லை, சித்தப்பா தயவில் வளர்ந்த போதும், ராஜாவுக்கு வஸ்தி என்ற துணைவி இருப்பது நன்றாக தெரிந்திருந்தாலும், தன்னை காப்பதற்கும் தனக்குண்டான ஸ்தானத்தை தருவதற்கு தனது தேவன் போதுமானவர் என்று விசுவாசித்த எஸ்தரின் நம்பிக்கை வீண் போகவில்லை.

எனவே பிரியமானவர்களே! பணத்தையும், ஜனத்தையும் கையில் வைத்திருக்கிற ஒருவன் உங்களுக்கு கிடைக்க வேண்டிய உதவியையும் பதவியையும் நிறுத்தி வைக்கலாம். அதை குறித்து கிஞ்சித்தும் கவலைப்பட வேண்டாம். ஆடு மே–த்தவன் அரசன் ஆனதும், காணாத கழுதையை தேடினவன் கர்த்தரின் தீர்க்கதரிசியானதும் ஆயத்தமாக்கின ஸ்தானத்திற்கு அழைத்துக் கொண்டு போவதற்கும், அமர்த்துவதற்கும் ஆண்டவர் போதுமானவர் என்பதை நிரூபிக்கும் அற்புதமான சான்றுகளாக இருக்கிறது.

நல்ல மே–ப்பன் தன் ஆடுகளை பெயர்ச்சொல்லி அழைக்கிறார் என்றும், நான் என் ஆடுகளை



அறிந்திருக்கிறேன். என் ஆடுகளால் அறியப்பட்டும் இருக்கிறேன் என்றும் யோவான் 10–ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து சொல்லியதை சிந்தித்துப் பாருங்கள்.

இருக்கிறவன் எவனும் தோன்றும் முன்னே பெயரிடப்படுகிறான் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. எனவே நம் ஒவ்வொருவருடைய பெயரையும் நம் ஆண்டவர் அறித்திருக்கிறார் என்பது உண்மை.

நீங்கள் பெயரை மாற்றிக் கொண்டு. ஊரை மாற்றிக் கொண்டு உருவத்தை மாற்றிக் கொண்டு உலகில் எந்தப் பகுதியில் இருந்தாலும். உங்களை தேவன் அறிந்திருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள்.

இது என் சபையில் நடந்த உண்மைச் சம்பவம். இந்துக் குடும்பத்தில் இருந்து இரட்சிக்கப்பட்ட அவருக்கு சுகந்தி என்று பெயர் வைத்து ஞானஸ்நானம் கொடுத்தேன். (தேவைப்பட்டால் ஒழிய பொதுவாக நான் யாருக்கும் பெயர் மாற்றம் செ–வது கிடையாது) சில ஆண்டுகள் நகர்ந்தது. ஒருநாள் ஆராதனையில் அந்த சகோதரி ஆனந்தக் கண்ணீரோடு எழும்பி நின்று ஒரு அற்புதமான சாட்சியை சொன்னார்கள்.

அவர் ஒரு விஷேசித்த ஜெப ஆராதனைக்கு சென்றிருக்கிறார். குடும்ப சூழலின் நிமித்தம் மிகுந்த கண்ணீருடன் அவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். என்னே ஆச்சரியம்! பிரசங்கியார் திடீரென்று சத்தமாக அன்பு சகோதரியே நீ கண்ணீரோடு வந்திருக்கிறா– உனக்கு உன் பெற்றோர் வைத்த பெயர் வேறு ஆனால் நீ கிறிஸ்துவுக்குள் வந்த போதோ சுகந்தி எனப் பெயரிடப்பட்டிருக்கிறா–, சகோதரி சுகந்தி கர்த்தர் உங்கள் கண்ணீரை மாற்றியிருக்கிறார் என்று அவர் சொல்லி ஜெபித்தாராம். இப்படி என் பெயரை

அறிந்திருக்கிற ஆண்டவருக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று அந்த சகோதரி சொன்ன பொழுது என் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வந்தது.

ஆம் பிரியமானவர்களே!

தேவன் நம்மை அறிந்திருக்கிறார் நமது நிலையை அறிந்திருக்கிறார். நமது தேவையை அறிந்திருக்கிறார். அவ்வளவு ஏன்! வார்த்தைகளால் வடிக்க முடியாத சோகங்களை வேதனையின் பெருமூச்சாக அஃதினை வெளிப்படுத்துகிற போது அதின் வெப்பத்தின் அளவையும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். இது வார்த்தை ஜாலங்கள் அல்ல. இந்த நூலை வடித்தவனின் வாழ்க்கையில் கண்ட உண்மை அனுபவம்.

நிறை மாத கர்ப்பிணி போகும் இடம் எது என்று தெரியாது. சாகும் வேளை எது என்று அறியாது. வனாந்தரத்தில் வாடி, வதங்கி நாடித் தளர்ந்து நடந்து கொண்டிருந்த போது, ஆகாரே என்று பெயர் சொல்லி அழைத்து, போகாதே என்று தடுத்து, சாகாத ஒரு வாழ்வை கொடுத்து, அடுத்து வாழ்வதற்கு வழி வகுத்து வளம் சேர்த்தவர் இந்தப் பெயர் சொல்லி அழைக்கும் தேவன்.

என் வாசகர்களில் ஒரு சிலருக்காகவே இந்த ஒரு சில வரிகளை எழுதுகிறேன். வாழ்க்கையின் முந்தின பகுதிகளில் பெயர் ரிப்பேர் ஆனதால் இனி இங்கிருக்க முடியாது என்று அடையாளம் காட்டிக் கொள்ள முடியாத அடைக்கப்பட்ட வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிற தெ–வப் பிள்ளையே இந்த நல்ல மே–ப்பன் உங்கள் வாழ்க்கையில் வல்ல காரியத்தை செ–யப் போகிறார்.

அமித்தாயின் குமாரனாகிய யோனாவே சாப்பாத்தின்,



குமாரனாகிய எலிசாவே நூனின் குமாரனாகிய யோசுவாவே பேயோரின் குமாரனாகிய பிலேயாமே என்று தகப்பனின் பெயரையும் சொல்லி தனி நபர்களை அழைத்தது மாத்திரமல்ல. கிஸீன் குமாரனாகிய சவுல் இப்பொழுது ஆயுத சாலையில் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று அவன் இருப்பிடத்தை அறிவித்தது மாத்திரமல்ல, உன் சகோதரனாகிய ஆரோன் நன்றாகப் பேசுகிறவன் என்று ஒவ்வொருவர் தனித்தன்மையும் அறிந்து அழைக்கிறவரும். அனுப்புகிறவரும் உங்கள் மேல் இப்பொழுது கரிசனையா– இருக்கிறார். கூண்டை விட்டு வெளியே வாருங்கள். என் ஆடுகளை அறிந்திருக்கிறேன் என்றும், என் ஆடுகளால் அறியப்பட்டும் இருக்கிறேன் என்றும் இயேசு சொன்னபடி நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டிய விதத்தில் அறிந்து கொள்ளுங்கள். அப்படி செ–வதற்கு நீங்கள் தவறி விடுவதினால் தான் நீங்கள் உருக்குலைந்து போகிறீர்கள். உருவக் குத்திக் கொள்கிறீர்கள்.

அவர் மனதுருகுகிறவர், மனம் இரங்குகிறவர், தவறும் போதும், தாண்டும் போதும் கண்டிக்கிறவர், சில வேளைகளில் அடிக்கிறவர் அவர் அடிக்கிறவர் என்பதினால் அழிக்கிறவர் என்று எண்ணி விடாதீர்கள்.

அவர் கடிந்து கொண்டாலும் கசந்து கொள்ளாதவர்.

அடித்தாலும் அணைக்கிறவர்

அடிப்பட்டால் காயம் கட்டுகிறவர்.

நசல் கொண்டால் தூக்கி சுமக்கிறவர் காணாமல் போனால் காரிருளிலும் தேடி வருகிறவர்.

இப்படிப்பட்ட நல்ல மே–ப்பர் இருக்கும் போது ஏன் கூனிக் குறுகி, நாணி நலிந்து போகிறீர்கள். நம்பிக்கையோடு எழுந்து வாருங்கள். மங்கி எரிகிற திரியை அணையாதவரும்,

நெரிந்த நாணலை முறியாதவரும், குப்பையில் இருக்கும் சிறியவனை சிங்காசனத்தில் அமரப் பண்ணவல்லவருமாகிய அவரிடம் எழுந்து வாருங்கள்.

உங்களை விட்டு விடுவதற்கு அவர் ஒன்றும் கூலிக்காரன் அல்ல, உங்களைக் கூறுபோட்டு விற்று விடுவதற்கு அவர் ஒன்றும் கசாப்புக் கடைக்காரன் அல்ல தன் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுத்த தங்கமான மே–ப்பன். தன் ஆடுகளின் வெட்கத்தை மாற்றும் தன்மான மே–ப்பன்.

கர்த்தர் என் மே–ப்பர் என்பதற்கு யேகோவா ரூவா என்று எபிரெய மொழியில் சொல்லப்பட்டுள்ளது எந்த இடமானாலும். எந்த இடறலானாலும்

யேகோவாரூவா

எங்கள் நல்ல மே–ப்பரே

கலங்க மாட்டோம் – நாங்கள்

கதற மாட்டோம்

என்று பரவசத்துடன் பாடுங்கள். வெற்றிக் கோஷம் போடுங்கள் விசுவாசப் பாதையில் ஓடுங்கள்.

# 3. போஷிக்கும் கர்த்தர்

அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மே–த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் நடத்துகிறார் என்ற இந்த இரண்டாவது வசனத்தைக் கவனித்துப் பாருங்கள்.

ஒரு ஆட்டிற்கு தண்ணீரும், புல்லும் தான் பிரதான தேவைகள். இவைகள் இரண்டையும் இந்த மே–ப்பன் தனது ஆடுகளுக்கு FULL ஆக தருவது போல, நம்முடைய ஆண்டவர் நம்முடைய அடிப்படைத் தேவைகளை பூரணமாக சந்திக்கிறார் என்று இந்த வசனம் வெளிப்படுத்துவதால் இந்த தேவனை போஷிக்கும் கர்த்தர் என்று போற்றிப் புகழுகிறேன்.

ஆதியாகமத்திலிருந்து வேதத்தின் கடைசிப் புத்தக மாகிய வெளிப்படுத்தல் வரை வேதத்தை நன்றா– அலசிப் பாருங்கள். தம்முடைய ஜனம் திருப்தியா– புசித்து தாகம் தீர குடித்து இன்பமா– வாழுவதையே தேவன் விரும்புகிறார் என்பதை தெளிவாக நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

ஆதாமும் ஏவாளும் தண்ணீர் குடத்தை எடுத்துக் கொண்டு அங்கும் இங்கும் அலைவதற்கோ அடுத்த வேளை உணவிற்கு என்ன செ–வோம் என்றெண்ணி அங்கலா–ப்பதற்கோ இடம் கொடாமல் ஏதேன் தோட்டத்தை சுற்றி நான்கு ஆறுகளையும், நன்கு கனிதரக்கூடிய நல்ல கனி விருட்சங்களையும் உண்டாக்கினார்.

அது மட்டுந்தானா? இஸ்ரவேலர் வனாந்தரத்தில் வரும் வழியில் தமது ஜனம் பட்டினியால் சாகவோ, தாகத்தால் நாவறளவோ கூடாது எண்றெண்ணி கற்பாறையிலிருந்து தண்ணீரும் மணற்பரப்புக்கு மேலே மன்னாவையும் தந்து ஆதரித்தவர் இந்த போஷிக்கும் கர்த்தர்.

பழைய ஏற்பாட்டில் கடைசிப் புத்தகம்..... ஆகாரம் உண்டாயிருக்கும்படி வானத்தின் பலகணிகளைத் திறந்து இடம் கொள்ளாமல் போகுமட்டும் உங்களை ஆசீர்வதிப்பேன் (மல். 3 : 10) என்ற வார்த்தையுடன் முடிகிறது. அதே நேரத்தில் கானாவூர் கல்யாணத்தில் தண்ணீரை திராட்சை ரசம் ஆக்கினார், என்று புதிய ஏற்பாட்டில் இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பத்தையும், உயிர்த்தெழுந்த பிறகு ஓடிப்போன, சீஷர்களை நாடிப் போன, மீன் கிட்டாமல் வாடிப் போன, சீஷர்களை நாடிப் போ– பசிக்குப் புசிக்க ருசியுள்ள பொரித்த மீனைத் தந்தவர், இந்த உயிர்த்தெழுந்த இயேசு என்று சுட்டிக் காட்டி கிறிஸ்து போஷிக்கும் கர்த்தர் என்பதை வெகு அழகாக சித்தரிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கவலை. ஒருவர் என்னிடத்திற்கு வந்தார். பாஸ்டர் பரலோகம் போனால் சாப்பிட முடியுமா? என்று ஆவலா– கேட்டார். பரலோகம் போனாலும் சாப்பாடுதான் பிரதானம் என்பது சிலருக்கு எண்ணம்.

பரலோகத்தைக் குறித்த படத்தைக் காண்பிக்கும் வெளிப்படுத்தின விசேஷத்தைக் கவனித்துப் பாருங்கள்.

★ ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்கு ஜீவ விருட்சத்தின் கனியை **புசிக்கக் கொடுப்பேன்.**

★ ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு மறைவான மன்னாவைக் கொடுப்பேன்.

★ **ஜீவநதி** அவருடைய சமூகத்திலிருந்து புறப்பட்டு ஓடுகிறது.

★ அங்கே மாதந்தோறும் புதுக்கனிகள் தரும் விருட்சங்கள் உண்டு. அதன் இலைகள் கூட ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.



ஆஹா என்ன இன்பம்! பரலோக இன்பம்! இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும், நம்மை போஷிக்கும் ஆண்டவர் நமக்கு இருக்கிறார்.

வறுமையிலும் வெறுமையிலும், வாடி வதங்கி இருக்கும் தெ–வ பிள்ளையே இந்த போஷிக்கும் கர்த்தரை சற்று நோக்கிப் பாருங்கள். பெற்றுக் கொள்ளத் தக்கதா– விசுவாசியுங்கள். நீங்கள் வறள மாட்டீர்கள் – வளருவீர்கள். தலைக்கு மேலே வெள்ளம் போனாலும் நீச்சல் அடித்து எதிர்த்து செல்வீர்கள். சோதனை, வேதனை சேர்ந்து வந்தாலும், சோர்ந்து போகாமல் சாதனை படைப்பீர்கள்.

ஏதோ இவரால் ஆகாரம் மாத்திரம் தான் தர முடியும் என்று எண்ணி விடாதீர்கள். ஒவ்வொரு மனிதனுடைய தனிப்பட்ட, குடும்ப, ஊழிய தேவைகள் எதுவானாலும் அவைகளை ஏற்ற வேளையில் சந்திப்பதற்கு இந்த போஷிக்கும் கர்த்தர் உண்மையுள்ளவராக இருக்கிறார்.

என் சொந்த வாழ்வில் என்னுடைய என் பிள்ளைகளுடைய, என் ஊழியத்தினுடைய தேவைகள் பெரியதாக இருக்கும் பொழுது இது எப்படி ஆகும் என்று இருதய பெருமூச்சுவிட்ட நாட்களுண்டு, அந்த வேளை எல்லாம் வேதத்தைத்திறந்து ஒரேயொரு வசனத்தை வாசித்து, என் சோகத்தை சிறையில் அடைத்து விடுவேன்.

சங்கீதம் 104 : 27, 28 ஐ சற்று கவனித்துப் பாருங்கள், **ஏற்ற வேளையில்** ஆகாரத்தை தருவீர் என்று அவை களெல்லாம் (திமிங்கிலங்கள்) உம்மை நோக்கிக் காத்திருக்கும், நீர் கொடுக்க அவைகள் வாங்கிக் கொள்ளும்.

இந்த வசனங்களை வாசித்து விட்டு ஆகாயத்துப் பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா!

என்ற அருள் நாதரின் அருளுரையை எண்ணிப்பார்த்து இந்த திமிங்கிலங்களை விட நான் விசேஷத்தவன் என்று என் சிந்தையை திருத்திக் கொள்வேன். திடப்படுத்திக் கொள்வேன், திருப்திப் பட்டுக் கொள்வேன். அவ்வளவுதான் என் சோகமும் தாகமும் வேகமே தீர்ந்து விடும்.

தீராத கடனா, பானையில் உள்ள எண்ணெ– போதும், போதும் என்று சொல்லும்வரை, பெருக்கெடுத்து வரச் செ–து விற்று கடனை அடைக்க கணக்கைத் தீர்க்க அற்புதம் செ–பவர் இந்த போஷிக்கும் கர்த்தர்.

தேசமெல்லாம் பஞ்சத்தில் வாடினாலும் தன்னை விசுவாசிக்கும் விதவையையும் தனக்காக நிற்கும் ஊழியனையும் போஷிக்கும்படி பானையில் உள்ள மாவும், எண்ணெயும் குறையாமல் பார்த்துக் கொள்ள போதுமானவர் இந்த போஷிக்கும் கர்த்தர்.

நான் சிலுவையை நோக்கிப் பார்க்கிறேன். சிலுவையிலே மனுக்குலத்திற்கு பாவமன்னிப்பு கிடைத்தது. சிலுவை நாயகனால் மனுக்குலத்திற்கு தெ–வீக சுகம் கிடைத்தது. இத்தோடு என் பார்வையை நான் நிறுத்திக் கொள்ளவில்லை. இன்னும் உற்றுப் பார்க்கிறேன். இந்த சரித்திர நாயகன் தரித்திர நாயகனாக தொங்குவதைக் கண்டு என் புருவம் உயருகிறது. அதே நேரத்தில் புதிய பொருள் எனக்குப் புரிவதினால் பூரிப்படைகிறேன்.

என் நேசர் மூன்றாவதாக ஒன்றையும் சிலுவையில் தந்தார். அது அவரது அங்கி, அந்த அங்கி என்னை உடுத்துவிப்பதற்காக அங்கியை இழந்து தொங்கிய காட்சியை நினைக்கும் பொழுது மற்ற எல்லாவற்றையும் எனக்கு அருள்வார் என்ற நம்பிக்கை எனக்குள் பெருக்கெடுத்து ஓடுகிறது.



ரோம 8 : 32ல் தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி? என்று நம்முடைய பிதாவாகிய தேவனைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிற வசனத்தை தியானம் பண்ணுங்கள்.

நாம் எல்லோரும், எல்லா நன்மைகளாலும் நிரப்பபடுவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது, ஆனால் எல்லோரும், எல்லா நன்மைகளையும் **ஒரே சமயத்தில்** பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய சித்தமும் அல்ல, திட்டமும் அல்ல.

எனவே அவளுக்கு கிடைத்து விட்டதே, எனக்கு ஏன் கிடைக்கவில்லை, அவனுக்கு நடந்ததே எனக்கு ஏன் நடக்கவில்லை, என்று அங்கலா–க்காதீர்கள், அழாதீர்கள், ஆத்திரப்படாதீர்கள்.

**ஏற்ற வேளையில்** அவைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறீர் என்ற வசனத்தையும், அவர் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செ–திருக்கிறார் (பிர. 3 : 11) என்ற வசனத்தையும், தமக்கு பயந்து, தம்மிடத்தில் அன்பு கூறுபவர்களுக்கு **சகலமும் நன்மைக்கு ஏதுவாக** நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோம. 8 : 28) என்ற வசனத்தையும் சற்று விசாலமாக சிந்தித்துப் பாருங்கள்.

லேயாளுக்குப் பிள்ளை பிறந்ததினால், அவசரமும் ஆத்திரமும் பட்ட ராகேலைப் போலவும், வண்ண சட்டைப் பெற்ற யோசேப்பைக் கண்டு எரிச்சலும், எதிர்ப்பும் கொண்ட அவரது சகோதரரைப் போலவும் மாறி விடாதீர்கள்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா? நீங்கள் பிறப்பதற்கு முன்னரே, இன்னும் சொல்லப் போனால் நீங்கள் கருவில்

உருவாகு முன்பே உங்களுக்கு எவைகள் தேவையோ அவைகள் அனைத்தையும் தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கிறார் என்பதே உண்மை. இதை ஒரு திருஷ்டாந்தத்தின் மூலமாக விளக்குகிறேன், கவனியுங்கள்.

ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்களை பொறுமையா– வாசித்துப் பாருங்கள். எல்லாவற்றையும் வார்த்தையினாலே தேவன் உண்டாக்கினார். ஆனால் மனிதனை உண்டாக்கவில்லை, உருவாக்கினார் என்பதின் அர்த்தத்தை நீங்கள் புரிந்து கொண்டால் தேவனின் அனைத்து படைப்புகளிலும் தலையானது மனுவர்க்கமே என்பதை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

இப்படியிருக்க தனது படைப்புகளில் தலைச்சிறந்த படைப்பாகிய மனிதனை முதல் நாளிலே சிருஷ்டிக்காமல் ஆறாம் நாளில் ஏன் சிருஷ்டித்தார் என்று கொஞ்சம் உங்களுக்குள்ளேயே கேள்வி கேட்டுப் பாருங்கள்.

ஆதாம், ஏவாளை கடைசியாக உருவாக்கியதற்கு ஒரு காரணம் உண்டு. அவர்கள் உருவான பிறகு தங்களுக்கு இது, இது வேண்டுமென்று பட்டியல் போட்டு தேவனுக்கு முன்பாக நீட்டக்கூடாது என்பதற்காகவே அவர்களுக்கு தேவையான வைகளை முதலில் சிருஷ்டித்துவிட்டு அவர்களை கடைசியில் உருவாக்கினார் என்று என் உள்மனதிற்குள் ஒரு சத்தம் ஒலிக்கிறது.

உங்கள் சிந்தனையை கொஞ்சம் கட்டவிழ்த்து விடுங்களேன். ஆஹா! எவ்வளவு பரந்த விரிந்த உலகம் எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று பழவர்க்க மரங்கள் சமைக்க வேண்டிய சங்கடமில்லாத உலகம். பகலிலே வெளிச்சம் தர சூரியன் இரவிலே மனரம்மியத்தை உண்டாக்கும் சந்திர ஒளி



மின்வெட்டு இல்லாத பொன்னான உலகம். உலகமே அவர்களின் கீழ் இருந்தாலும் அவர்கள் சொந்தம் கொண்டாட ஏதேன் தோட்டம் என்கிற ஒரு இன்ப பூமி அதில் குடம் ஏந்தி ஊர்வலம் வர அவசியம் இல்லாமல் குடிநீர் தருகின்ற ஜீவநதிகள்.

இந்நாளில் ஆகார மாற்றம் வந்தால், ஆகாரத்திற்கென ஆயிரக்கணக்கான மச்ச வகைகள் ஆழியிலே அளவிட முடியா மிருக ஜீவன்கள் பூமியிலே, என அடுக்கடுக்கா– அனைத்தையும் முடித்து விட்டு இவைகளெல்லாம் உங்களுக்குத்தான் என்று ஆதாம் ஏவாளிடம் தேவன் சொன்னதை எண்ணிப் பாருங்கள்.

ஆதாம் மாத்திரம் தேவனுடைய பிள்ளை அல்ல. நாமும் அவருடைய பிள்ளைகள் தான். மீண்டும் சொல்கிறேன். வேறு மதத்திலிருந்து நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கலாம். குணப்படாத பெற்றோருக்கு பிறந்து விட்டோமே என்று எண்ணி நான் கிறிஸ்துவுக்கு தத்துப்பிள்ளை என்று தத்துவம் பேசாதீர்கள்.

அவர்கள் (கிறிஸ்துவை விசுவாசித்து தேவனை ஏற்றுக் கொண்டவர்கள்) இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினா லாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள் (யோவா. 1: 13) இந்த வசனத்தின்படி நீங்கள் தேவனால் பிறந்தவர்கள் ஆதாமைப் போல விசேஷமானவர்கள்.

ஆதாமுக்கு முன்னரே அவனுக்கு தேவையானவைகள் உருவாக்கப்பட்டது போல உங்களுக்கு தேவையானவை களையும் தேவன் ஏற்கனவே உருவாக்கி விட்டார், என்பதை அறியுங்கள்.

நிகழ் காலத்தில் சில நேரங்களில் பொருள் புரியாத இருள்

சூழ்ந்து கொள்ளலாம். கஷ்டம் ஏற்பட்டு நஷ்டமானோமே என்று கலங்கலாம். துஷ்டர்கள் கையில் ஒப்புக் கொடுக்கப் பட்டது போல துயரம் உங்களை சூழ்ந்து கொள்ளலாம். இவைகளுக்காக கண்ணீர் வடிப்பதற்கு பதிலாக கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுங்கள்.

யோசேப்பு காணாமல் போனதினாலே இடி விழுந்தது போல மனம் மடிந்து ஒடிந்து போனான், ஆனால் என்ன ஆச்சரியம்! சில ஆண்டுகளுக்கு பிறகு ஓர் இன்ப செ–தி யாக்கோபுக்கு வருகிறது. அது எகிப்திலே ஆகாரம் உண்டு என்கிற செ–தி அல்ல. இஸ்ரவேல் முழு குடும்பத்திற்கும் ஜீவ ரட்சண்யத்தை உண்டாக்கும்படி யோசேப்பு அங்கே இருக்கிறார் என்பதே.

யோசேப்பு அனுப்பிய வண்டில்களை பார்க்கும் போதும், யாக்கோபின் ஆவி உயிர்த்தது என்று வேதம் சொல்கிறது. இது போஷிக்கும் கர்த்தரின் மகிமையான நடத்துதல்.

யோசேப்பை இஸ்மவேலர் கையில் விற்றுப் போட்ட போது அவன் உள்ளம் எவ்வளவா–த் துடித்திருக்கும். எல்லோரும் அவன் அடிமையாக போகிறான் என்று கணக்குப் போட்டு விட்டார்கள். ஆனால் கர்த்தரோ அவனை போத்திபாரின் அரண்மனைக்கு அதிகாரியாக்கினார், பார்வோனுக்கு அடுத்த வனாக்கினார். அப்பத்திற்காக அடுத்த தேசத்தவரெல்லாம் அவனிடத்தில் ஓடிவரும்படி அந்தஸ்தை உயர்த்தினார் இது போஷிக்கும் கர்த்தரின் செயல்.

எனக்கன்பானர்வர்களே! உங்கள் ஆத்துமா உயிர்மீட்சி அடையும்படியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பாக நீங்கள் இழந்த அல்லது உங்களிடமிருந்து பறிக்கப்பட்ட பல நன்மைகளைக் குறித்து



கிஞ்சிற்றும், கலங்க வேண்டாம் – கிஞ்சிற்றும் கவலைப்பட வேண்டாம்.

யாக்கோபு யோசேப்பை இழக்கும் பொழுது யோசேப்பு சிறியவனாக இருந்தான். ஆனால் யாக்கோபு பெரியவனாகிய யோசேப்பைத் திரும்ப பெற்றுக் கொண்டான். யாக்கோபு சகோதரரால் நிராகரிக்கப்பட்ட யோசேப்பை இழந்தான். ஆனால் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட யோசேப்பை திரும்பக் கண்டான்.

இதைப் போலவே இன்னும் சில நாட்களில் வாரங்களில், மாதங்களில், ஒரு மாபெரும் அற்புதம் போஷிக்கும் கர்த்தராலே திரும்பப் பெற போகிறீர்கள். சாதாரணமாக அல்ல பெரியவைகளாகவும், அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது மானவைகளாகவும்.

இன்னும் சொல்கிறேன். நீங்கள் ஒன்றை இழக்காமலேயே மற்றொன்றை பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள். இதைத்தான் நாம் ஆபிரகாமின் வாழ்க்கையில் பார்க்கிறோம். ஈசாக்கை அழைத்து கொண்டு மோரியா தேசத்துக்குப் போகையில் ஆடு எங்கே? என்று மகன் கேட்கையில் கர்த்தர் போஷிப்பார் (God Will Provide) என்று சென்ற ஆபிரகாம் வெட்கமடையவில்லை.

தேவனிடத்தில் அன்பு கூர்ந்து தன் மகனை பலிக்கட்டைகள் மேல் கிடத்தினாலும், தன் மகனை அவன் இழக்க ஆண்டவர் அனுமதியாமல் ஆட்டுக்குட்டியை அந்த மலையிலேயே கொடுத்தார்.

அப்படியே ஆண்டவரிடத்தில் அன்பு கூர்ந்து அவருக்கா– நீங்கள் செ–கிற அன்பின் கிரியைகளினிமித்தம் நீங்கள் வெட்கப்படாமல் அற்புதமான வழியில் போஷிக்கும் கர்த்தராலே, புதுப்புது ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள்.

இந்த இருபத்து மூன்றாம் சங்கீதம் இரண்டாம் வசனத்தில் ஓர் குறிப்பிட்ட வார்த்தை என்னை மிகவும் வியக்க வைக்கிறது. தண்ணீர்கள் அண்டையில் என்னை நடத்துகிறீர் என்று எழுதப்படாமல் **அமர்ந்த** தண்ணீர்கள் அண்டையில் என்னை நடத்துகிறார் என்று எழுதப் பட்டுள்ளதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மனிதருடைய முக அமைப்பிற்கும், ஆடுகளின் முக அமைப்பிற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. மனிதர்களின் வா–க்கு மேலே மூக்கின் கீழே சற்று இடைவெளி இருக்கும். அந்த இடைவெளி எதற்கு என்று சிலர் அட்டகாசமான முறுக்கு மீசை வைத்துக் கொள்கிறார்கள். இப்போது அதைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஆடுகளை சற்று கவனித்துப் பாருங்கள். வா– கீழ் நோக்கி இருக்கும். அதே சமயத்தில் மூக்கு முந்திக் கொண்டு முகத்தில் இருக்கும்.

இப்படியிருக்க அலைபாயும் தண்ணீரை ஆடு குடிக்க நேர்ந்தால் தண்ணீர் வா–க்குள் போவதற்கு முன்பாகவே ததும்பும் தண்ணீர் மூக்கிற்குள் ஏறி புரை உண்டாகி ஆட்டுக்கு சிக்கல் ஏற்பட்டுவிடும். எனவே தான் தண்ணீர் காட்டுவது முக்கியமல்ல அதைப் பருகும் ஆட்டிற்கு பிரச்சினை உண்டாகி விடக் கூடாது என்பதற்காக ஓடும் தண்ணீரையோ ஆடும் தண்ணீரையோ இந்த ஆட்டிற்கு கொடுக்காமல் அமர்ந்த தண்ணீரை இந்த மே–ப்பன் கொடுக்கிறார்.

இப்பொழுது **அமர்ந்த தண்ணீர்** என்ற வார்த்தையின் அர்த்தத்தையும் ஆழத்தையும் புரிந்து கொண்டீர்களா? நம்முடைய ஆண்டவர் ஆசீர்வாதங்களையல்ல, வேதனையை உண்டாக்காத ஆசீர்வாதங்களை நமக்குத் தருகிறார் என்பதே உண்மை. கர்த்தர் நம்மை ஆசீர்வதித்தால் அதனோடே அவர் வேதனையை கூட்ட மாட்டார்.



இங்கே ஒரு ஆபத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமக்கு கிடைக்கிற வருகிற அனைத்தும் ஆண்டவரிடத்தி லிருந்து வந்தது என்று எண்ணிவிடக்கூடாது. அதிக விழிப்புடன் ஆழமாக அவைகளை ஆரா–ந்து அறிந்திடல் வேண்டும். ஆபிரகாமிற்கு இஸ்மவேலும் ஈசாக்கும் பிறந்தார்கள். ஆனால் ஈசாக்கு கர்த்தரால் அருளப்பட்டவன். இஸ்மவேல் ஆபிரகாமால் பெறப்பட்டவன். ஈசாக்கினால் எள்ளளவும் வேதனை ஆபிரகாமிற்கு வரவில்லை, ஆனால் இஸ்மவேல் கருவானபோதும், அவன் வாலிபனாக உருவான போதும் ஆபிரகாமிற்கு சிக்கல் ஏற்பட்டது.

சிலர் பார்ப்பதை எல்லாம் வாங்கத் துடிக்கிறார்கள். கேட்பதையெல்லாம் காணத்துடிக்கிறார்கள் தங்கள் ஆசைகளை நிவர்த்தி செ–து கொள்ள சுலபத் தவணைக் கடைகளையும், நிதி நிறுவனங்களையும் நாடி ஆசைப்படுவதை அடைந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் கர்த்தர் கொடுத்தார் என்று படு பந்தாவாக சாட்சி சொல்லுகிறார்கள்.

சில மாதங்களுக்குப் பிறகு தவணையை செலுத்த முடியாமல் தவிக்கிறார்கள். நிதி நிறுவனத்துக்காரன் அந்த பொருளை அள்ளிக்கொண்டு – தள்ளிக்கொண்டு போ–விடுகிறான். போகிறவன் சும்மா போவானா, மோசமான நாலு வார்த்தை சொல்லிக் கொண்டே போகிறான். கர்த்தர் ஆசீர்வதித்தால் அதனோடே வேதனையை கூட்ட மாட்டார் என்று அப்போதாவது அவர்கள் உணர்வார்கள் என்றால் அதுதான் இல்லை. கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் அவருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று நீட்டி முழங்குகிறார்கள்.

பிரியமானவர்களே! நீதிமானுடைய ஆசை அவனுக்கு அருளப்படும், நம்முடைய ஆண்டவர் போஷிக்கிற ஆண்டவர் மட்டுமல்ல, நம்மை வெட்கப்படுத்தாத ஆண்டவர். ஆடுகளுக்குப் பின்னாக சென்றவனை அரசனாக மட்டுமல்ல, ஐசுவரியவானாக மாற்றினார். அழைப்புக்கு கீழ்ப்படிந்து அந்நிய தேசம் புறப்பட்டவனை அனாதையாக்காமல் சீமானாக்கினார். இப்படியிருக்க நீங்கள் விரும்புவதைத் தருவதற்கு அவர் உண்மையுள்ளவர் என்பதை அறிந்து கர்த்தருக்கு காத்திருங்கள். கர்த்தருக்கே காத்திருங்கள்.

அந்த நாட்களில் என் வாழ்க்கையில் கர்த்தர் செ–த நன்மைகளை இன்னும் என்னால் மறக்க இயலாது. அது என் ஊழியத்தின் ஆரம்ப நாட்கள். சென்னை அடையாறுக்கு பக்கத்து நிறுத்தத்திலிருந்து கிண்டி ரயில் நிலையத்திற்கு நான் வருகிறேன். அப்போது பேருந்து கட்டணம் வெறும் நாற்பது பைசா தான். கிண்டியிலிருந்து நான் தங்கியிருந்த பல்லாவரத்திற்கு செல்ல ரயிலுக்கான மாதாந்திர பயண சீட்டு வைத்திருந்தேன். கிண்டி செல்வதற்கு பாக்கெட்டில் கையை விட்டால் முப்பது காசு மாத்திரமே என்னிடம் இருந்தது. நடந்தே கிண்டி ரயில்நிலையம் வந்தேன். வரும் வழியில் தான் கவர்னர் மாளிகை இருக்கிறது. அது வழியா– நடந்து வரும் பொழுது கரிய, சிறிய பாம்பு ஒன்று என் முன்னே கடந்து சென்றது. கண்ணுற்ற எனக்கு கண்ணீர் வந்து விட்டது.

உலகத்தாரெல்லாம் உல்லாசமா– வண்டியில் போகிறார்கள். ஊழியம் செ–கிற நான் உயிரைப் பிடித்துக் கொண்டு நடக்கிறேனே என்று மன உளச்சலோடு நடந்தேன். கொஞ்ச தூரத்தில் ஒரு கடையின் முன்பு இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தது. நான் துணிந்து அதன்



அருகே சென்றேன். அதன் மேல் கையை வைத்து கர்த்தாவே இதைப் போன்ற ஒரு வண்டியை எனக்கு தரப்போகிறதற்கா– உமக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லி விட்டு வண்டியில் வரும் நினைப்பிலேயே நடந்தே கிண்டி வந்து விட்டேன்.

இவைகளெல்லாம் காலப்போக்கில் நான் மறந்து விட்டு காலே கதி என்று நடந்து சென்று கொண்டிருந்தேன். ஒருநாள் எனது தலைமைப் போதகரிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. தம்பி உங்களுக்காக ஒரு வண்டி வாங்கி வைத்திருக்கிறோம் வந்து எடுத்துச் செல்லுங்கள் என்று வந்த அழைப்பு அது. அதன் பேரில் அங்கு சென்று அந்த வண்டியைப் பார்த்த எனக்கு இருதயமே நின்று விடும் போன்ற அதிர்ச்சி இடி இறங்குவது போன்ற உணர்ச்சி, காரணம் சில காலத்திற்கு முன்பு எந்த வண்டியின் மீது கைகளை வைத்து ஜெபித்தேனோ அதே சில்வர் ப்ளஸ் அங்கு நின்று கொண்டிருந்தது.

இன்று நினைத்தாலும் அந்த நிகழ்ச்சி என் இதயத்தில் பாதிப்பை உண்டாக்குகிறது. அந்த வண்டியை நான் கேட்கும் போதே கர்த்தரால் கொடுத்திருக்க முடியும். ஆனால் அப்படி அவர் கொடுத்திருந்தால் அதை பராமரிப்பதற்காக பத்து பேரிடம் இருபது சலாம் போட்டிருக்க வேண்டும். எனவே தான் சகலத்தையும் நேர்த்தியாக செ–கிற ஆண்டவர் முதலில் என்னை திடப்படுத்தி விட்டு பின்னர் எனக்கு அந்த வண்டியைக் கொடுத்தார்.

அத்தோடு இந்த போஷிக்கும் கர்த்தர் நின்று விட்டாரா, அதுதான் இல்லை, அந்த வண்டி 10 ஆண்டுகள் என்னை இழுத்துச் சென்றது. அதற்குப்பிறகு அதை நான் இழுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. என் தேவன் நல்லவர். அதை விடுத்து நான் தனியே செல்வதற்கு ஒரு மென்மையான வேறு

வாகனத்தைத் தந்தார். அத்தோடு நின்று விடவில்லை. குடும்பமாக செல்ல நான்கு சக்கர வாகனம் என தொடர்ந்து தந்து கொண்டே தான் இருக்கிறார்.

இவைகளை நான் குறிப்பிட காரணம், எனக்கு இருப்பவைகளை நான் அடையாளம் காட்ட அல்ல, நம்முடைய அருமை ஆண்டவர் போஷிக்கும் கர்த்தர் என்பதை கோடிட்டு காட்டவே, அவருடைய கரம் குறுகி போகிற கரம் அல்ல என்றைக்கும், எதையும், எங்கும், எவர்க்கும் அருளக் கூடிய அற்புதமான கரமது. பணத்தால், ஜனத்தால் எந்த ஒன்றையும் கூட பெற முடியாத, தரமுடியாதவைகளை தருவது மாத்திரமல்ல, தரமானதாகவும், தாராளமாக தர வல்லவர் என்பதை அடித்துச் சொல்ல விரும்புகிறேன்.

தரம் – தாராளம் என்ற இந்த வார்த்தைகள் அடுக்கு மொழிக்காக தொடுக்கப்பட்ட வார்த்தைகள் என்று சாதாரணமாக எண்ணிவிடாதீர்கள். கானாவூர் கல்யாண வீட்டிலே, தண்ணீரை இயேசு திராட்சை ரசமாக்கினதை பருகிப் பார்த்த பந்தி விசாரிப்புக்காரன், நீரோ **நல்ல ரசத்தை** இதுவரைக்கும் (கொடுக்காமல்) வைத்திருந்தீரே என்று அதிசயித்தான். இது தரத்திற்கு உதாரணம்.

வனாந்திரத்தில் ஐந்து அப்பம், இரண்டு மீனை ஐயாயிரம் பேருக்கு கொடுத்தது முக்கியமல்ல எல்லாரும் **சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள்**.... மீதியான துணிக்கைகளை பனிரெண்டு கூடை நிறைய எடுத்தார்கள். இது அவர் தாராளமா– கொடுக்கிறார் என்பதற்கு உதாரணம்.

இந்த போஷிக்கும் கர்த்தர் யார்? அவர் கூப்பிடும் காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறவர். காட்டுப் புஷ்பங்களிலும் நம்மை அழகா– உடுத்துவிக்கிறவர். வீடு, வாசல்



இல்லாதவர்களுக்கு வீடு, வாசல் ஏற்படுத்துகிறவர். மாப்பிசையும் தொட்டி முதற்கொண்டு, மரங்களையும், மாடுகளையும், ஆசீர்வதிக்கிறவர்.

இப்படியிருக்க நிகழ்கால தேவைகளுக்கும் எதிர்காலத் திட்டங்களுக்கும் என்ன செ–வோமென்று கலங்காதீர்கள். முந்நூறு பணம் இருந்தாலும் போதாதே என்று சீஷர்களைப் போல் பஞ்சப்பாட்டு பாடாதீர்கள். அப்படி பணம் இருந்தாலும் இது ராத்திரி நேரமாயிற்றே கடைகள் இருக்காதே என்று அடைக்கப்பட்ட வழிகளை எண்ணி அங்கலா–க்காதீர்கள்.

யேகோவாவயிரே – எல்லாமே பார்த்துக் கொள்வீர்

கலங்க மாட்டோம் – நாங்கள்

கதற மாட்டோம்

என்று கணீர் குரலில் பாடுங்கள்.

இதோ காற்று அடிக்கிறது– காடைகள் வந்து கொட்டுகிறது–அதோ கன்மலை நகர்கிறது. தண்ணீர் தரை மார்க்கமா– நகர்ந்தோடுகிறது. இதோ பாருங்கள். வானம் மாரியைப் பொழிவதற்குப் பதிலாக மன்னாவை வாரி இறைக்கிறது. திரும்பும் பக்கமெல்லாம், திருப்பம் தெரிகிறதா? ஆமாம் யேகோவா யீரே என்னும் போஷிக்கும் கர்த்தராலே நீங்கள் தாழ்ச்சியடைய மாட்டீர்கள்.

# 4. தேற்றும் கர்த்தர்

அவர் என் ஆத்துமாவைத்தேற்றி தமது நாமத்தினிமித்தம் நீதியின் பாதையில் நடத்துகிறார். நம்முடைய பிதாவானவர் வேதனைகளால் புண்பட்ட இதயங்களை ஆற்றுகிறவர் – மாற்றுகிறவர்.

மேலும் நமக்கு அருளப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவியைக் குறித்து நமது இரட்சகர் சொல்லும் போது, நான் போகிறேன் நான் போ– பரிசுத்த ஆவியானவராகிய வேறொரு தேற்றரவாளனை உங்களுக்கு அனுப்புகிறேன், என்று சொல்லி யிருக்கிறார். ஒரு தா– தன் பிள்ளையைத் தேற்றுவது போல நம்முடைய கர்த்தர் நம்மைத் தேற்றுகிறார்.

தேற்றுகிறார் என்ற வார்த்தையை இன்னும் நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளும்படி வேறொரு வார்த்தையை பயன்படுத்த விரும்புகிறேன். கலங்கும் உள்ளத்தை–கதறும் உள்ளத்தை **சமாதானத்தால் நிரப்புகிறார்**, என்பதே அந்த வார்த்தை.

ஆதியாகமத்தில் ஸ்திரியின் வித்து என்ற பெயரோடு அறிமுகப்படுத்தப்படுகிற கிறிஸ்துவின் நாமம் வெளிப்படுத்தின விசேஷத்தில் (19 : 13) தேவனுடைய வார்த்தை என்று சொல்லப்பட்டிருக்கிற நாமம் வரை நூற்றுக்கணக்கான நாமங்கள் கிறிஸ்துவுக்கு சூட்டப்பட்டிருந்தாலும், ஏசாயா தீர்க்கனால் சொல்லப்பட்ட அவருடைய நாமம்..... சமாதானப் பிரபு எனப்படும், என்ற நாமமே என்னுள் ஓங்கி ஒலிக்கிறது.

ஆம் தெ–வபிள்ளையே நமக்கு ஒரு ஆண்டவர் இருக்கிறார், அவர் நம்முடைய மே–ப்பரும் போஷகரும் மாத்திரமல்ல, அவர் நமக்கு சமாதானம் அருளுகிற கர்த்தர்,



ஏதோ ஒரு சமாதானத்தை எதன் மூலமாகவோ அவர் கொடுக்கவில்லை, **தன்னுடைய சமாதானத்தையே** அவர் நமக்குத் தருகிறார். அந்த சமாதானத்தை ஒருவராலும் எடுக்கவும் முடியாது, கெடுக்கவும் முடியாது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.

வேதத்தில் ஒவ்வொரு காரியங்களுக்கும் உவமைகளாக வேறொரு காரியம் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே உன்னதமானது சமாதானத்தைக் குறித்து சொல்லப்பட்டது. சமாதானத்தை நதியைப் போல..... (ஏசா. 48 : 18) என்று சமாதானத்தை நதிக்கு ஒப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். உங்கள் சமாதானம் ஒரு நாளும் வற்றாது. மாறாக பா–ந்து ஓடி எண்ணற்ற மக்களை பூரிப்பாக்கும், என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

சில வேளைகளில் வேதத்தில் சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்களுக்கும் நிஜ வாழ்வில் சந்திக்கும் காரியங்களுக்கும் இடையில் மிகப் பெரிய முரண்பாடு இருப்பதுபோலத் தெரியும். அந்த மாயத் தோற்றத்தைக் கண்டு மனமுடைந்து போகிறவர்கள் மாண்டு போகிறார்கள். இது மாயையான தோற்றம். மாறிவரும் சூழ்நிலையில் தோற்கும், என்று நம்புபவர்கள் வெற்றிபெறுகிறார்கள்.

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும் கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் (சங் 34:19) என்ற வசனத்தின் மேல் நம்பிக்கை வைப்பவர்கள், எந்த நாளிலும், எந்த நாழிகைகளிலும் சமாதானத்தை இழக்கவே மாட்டார்கள்.

தானியேலை முகாந்தரமில்லாமல் பகைத்தவர்கள் மூன்று வேளை ஜெபித்தற்காகவே வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க

எண்ணினார்கள். முத்திரை போடப்பட்ட சட்டம் வந்தது, முழுஇரவும் சிங்கக் கெபியில் இருக்க வேண்டிய நிலை வந்தது. ஆனாலும் நிலைகுலைந்து தன் சமாதானத்தை தானியேல் இழக்கவில்லை.

அடுத்த நாள் அவனிருக்கும் இடத்தே அரசன் வந்து அழைத்தபொழுது அரசே நீர் வாழ்க என்று சொன்னதிலிருந்தே அவனுக்குள் இருந்த சமாதானம் எத்தன்மையுடையது என்பதை நீங்களே புரிந்து கொள்விர்கள்.

வேதத்தில் எத்தனையோ தெ–வீக உடன்படிக்கைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றை மாத்திரம் இங்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்.

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந் தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கு மென்று உன்மேல் மனதுருகிற கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா 54:10)

இதில் நம்முடைய ஆண்டவர் நம்மோடுகூட சமாதானத்தின் உடன்படிக்கை செ–திருக்கிறார் அது நிலை பெயராது, இவரை மலைபோல் நம்பினேனே, அவளை பர்வதம் போல் நம்பினேனே விலகிப் போ–விட்டார்களே, விரோதிகளாகி விட்டாார்களே, நிலைபெயர்ந்து விட்டார்களே – நிந்திக்கிறார்களே என்று நீங்கள் கண்ணீர் சிந்த வேண்டாம். எவர் போனாலும் எதுபோனாலும் கர்த்தர் உங்களுக்கு வைத்திருக்கின்ற சமாதானத்தை நீங்கள் இழக்கவே முடியாது உற்சாகப்படுங்கள்.

யாக்கோபு தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் போது கர்த்தர் என்று சொல்லாமல் (ஆதி 49:10) **சமாதான கர்த்தர்**



என்று சொல்லி யூதாவை ஆசீர்வதிப்பதை கவனித்துப் பாருங்கள். இதே அனுபவத்தை கிதியோனுடைய வாழ்க்கை யிலும் பார்க்கிறோம். அவன் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி அதற்கு யேகோவா ஷாலோம் என்று பெயரிட்டான் (நியா. 6 : 24) அதற்கு சமாதான கர்த்தர் என்று அர்த்தமாம்.

இப்படி பலிபீடம் கட்டிய பிறகு என்ன நடந்தது தெரியுமா? அனுகூலத்திற்கு பதில் பிரதி கூலமே பிரதிபலித்தது. அடுத்த நாள் அதிகாலையில் ஊரே திரண்டு விட்டது. கர்த்தரின் வார்த்தையின்படியே செ–த கிதியோன் சாகவே சாக வேண்டும் என்று ஊரார் முழு மூச்சா– முரசு கொட்டினார்கள். ஆனால் கர்த்தர் அவனை சாவுக்கு ஒப்புக் கொடுக்கவில்லை. பாகால் வழக்காடட்டும் என்று அவனுக்கு யெருபாகால் என்று பெயர் உண்டாயிற்று. கிதியோன் நின்றான் யுத்தத்திற்கு சென்றான். மீதியானியரைக் கொன்றான் மொத்தத்தில் சகலரையும் வென்றான்.

கர்த்தருடைய பிள்ளையே கலங்காதே கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கப் பிரயாசப்படுகிற உனக்கு எதிராக ஒரு கூட்டம் எழும்பியிருக்கிறது என்பது உண்மை. நீ சாக வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். ஆனால் உன்னோடே கூட சமாதானக் கர்த்தர் இருக்கிறார். ஒரு நாளும் உன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு அவர் உன்னை ஒப்புக் கொடுக்க மாட்டார்.

அதற்குப் பதிலாக உன்னோடு கூட இருந்து கொண்டே சூழ்ச்சி செ–பவர்களையும் உனக்கு எதிரா– யுத்தத்திற்கு வருபவர்களையும் ஒன்று சேர கர்த்தர் வெட்கப்படுத்தப் போகிறார். கிதியோனுக்கு யெருபாகால் என்று பட்டப் பெயர் சூட்டப்பட்டது போல நீ படைக்கப் போகும் சாதனையால் உன் கீர்த்தி விளங்கும்படி புதுப் பெயரால் அநேகரால் நீ

அழைக்கப்படுவா– இதை யெகோவா ஷாலோமே செ–யப் போகிறார்.

**உன் அலங்கத்திற்குள்ளே :** முதலாவது தேவன் சமாதானத்தை எங்கே வைக்கிறார் தெரியுமா? ‘‘உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும் உன் அரண்மனைக்குள்ளே சுகமும் இருப்பதாக’’ (சங். 122 : 7) முதற்கண் கர்த்தர் நம்முடைய வீட்டிற்குள் சமாதானத்தை வைக்கிறார்.

என் அன்பு வாசகரே! இந்த நிமிடம் வரை ஒரு பூரண சமாதானம் உங்களுக்கு குடும்பத்தில் இல்லாமல் இருக்கலாம். சில இடங்களில் உள்நாட்டுக் குழப்பத்தால் வெடிச்சத்தம் கேட்டுக் கொண்டிருப்பது போலவே அடிசத்தமும், கடி சத்தமும், அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கலாம். வேதத்தைத் திறந்து மேற்கண்ட வசனத்தின் மேல் கைகளை வைத்து கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள், அதி சீக்கீரமாக இந்த உபத்திரவத்தை கர்த்தர் நீக்கிப் போடுவார்.

விவாகரத்து செ–து கொள்ள வேண்டும் என்று என்னிடத்தில் நேரடியாக வந்த தம்பதியர்கள் உண்டு, விவாகரத்திற்கு ஆலோசனைக் கேட்டு தனித்தனியாக கடிதம் எழுதின கணவன் மனைவி உண்டு. அப்படிப் பட்டவர்களுக்கு பிரிந்து போக வழி சொன்னது கிடையாது. எனக்கு கடிதம் எழுதினவர்கள் பின்னர் பிரிந்து போனதும் கிடையாது.

என்னுடைய புத்தக அறையிலே மிகப்பெரிய தமிழ் கத்தோலிக்க வேதாகமம் உண்டு. அது எனக்கு ஒரு சகோதரியால் எனக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசு. அந்தப் பரிசை கொடுத்த பிறகு இந்த இருபது ஆண்டு காலமா– அவருடைய முகத்தை பார்க்கவில்லை. அவர்கள் முகவரியும் தெரியவில்லை. ஆனாலும் அந்த வேதத்தை



எப்பொழுதெல்லாம் எடுக்கிறேனோ கண்களை மூடி கர்த்தரைத் துதிக்கிறேன். அதற்கு ஒரு பின்னணி உண்டு.

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக நான் சென்னையிலே இருந்தேன். ஒருநாள் பெண்களுக்கான உபவாச கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தேன். கூட்டத்திற்கு புதிய சகோதரி ஒருவர் வந்திருந்தார். நான் வழக்கம் போல் கூட்டத்தை நடத்தி முடித்தேன். கூட்டம் முடிந்தது. அந்த சகோதரி நேரே என்னிடத்திற்கு வந்தார். ஐயா உங்கள் வார்த்தைகள் எனக்கு சமாதானத்தை உண்டாக்கியது. என்னுடைய இருப்பிடம் திருச்செந்தூர் என் கணவர் என்னை வெறுத்து விவாகரத்து கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார். இன்னும் இரண்டு நாட்களில் வழக்கு முடிந்து விடும். தீர்ப்பு எனக்கு எதிராகத்தான் இருக்குமென்று எனக்குத் தெரியும். மனசாந்தியைத் தேடித்தான் நான் சென்னைக்கு வந்துள்ளேன் என்று அவர் சொல்லி முடித்தார்.

இதைக் கேட்ட என் உள்ளம் சுக்கு நூறா– உடைந்தது. மனதுருகும் கர்த்தாவே இவர்களுக்கு மணமுறிவு ஏற்படக்கூடாது. நீர் யேகோவாஷாலோம் இன்று ஓர் அற்புதம் செ–யும் என்று கண்ணீரோடு ஜெபித்து அனுப்பி விட்டேன்.

அடுத்த நாள் அந்த சகோதரி சிரித்த முகத்துடன் என்னைத் தேடி வந்தார். கையில் பெரிய கத்தோலிக்க வேதாகமம், ‘‘ஐயா, கர்த்தர் என்னை காப்பாற்றி விட்டார் நம்ம கண்ணீர் ஜெபத்திற்கு பதில் செ–து விட்டார். என் கணவர் என்னை உடனே திரும்ப வரும்படி அழைத்திருக்கிறார்’’ என்று சொல்லி தந்தியைக் காண்பித்தார்.

‘‘மேலும் தொடர்ந்தார், நான் கத்தோலிக்க மார்க்கத்தைச் சேர்ந்தவள். நீங்கள் என்னிடத்தில் பேசும்

பொழுது கத்தோலிக்க வேதாகமத்தில் உள்ளபடியே பெயர்களையும் வார்த்தைகளையும் உச்சரித்த படியால் நீங்கள் சொன்ன சத்தியம் எனக்கு தெளிவா–ப் புரிந்தது. எனவே என்னைப் போன்ற கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் பாணியிலேயே நீங்கள் பேச உதவியா– இருக்கும்படி இந்த வேதாகமத்தை உங்களுக்கு அன்புப் பரிசா– தருகிறேன்!'' என்றார்.

யேகோவா – ஷாலோமை இருகரம் குவித்து ஸ்தோத்தரித்தேன். இந்த தேவன் என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் நமது தேவன் – நல்ல தேவன்.

இன்னும் ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. ஈரோட்டில் இருந்து ஒரு சகோதரி எனக்கு கடிதம் எழுதியிருந்தார். இவரோ கிறிஸ்துவை விசுவாசிப்பவர். அவரின் கணவரோ எதையும் எவரையும் ஏற்றுக் கொள்ளாதவர். தற்போது நாங்கள் இருவரும் பிரிந்திருக்கிறோம். நாங்கள் ஒன்று சேர ஜெபியுங்கள். ஆனால் நீங்கள் நேரடியாக களத்தில் இறங்கினால், எனக்கு பல விபரீத காரியங்கள் நிகழலாம் எனக் கண்ணீரோடு எழுதியிருக்கிறார்.

கடிதத்தை வாசித்தேன், கனத்த இதயத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் தந்த யோசனையின்படி ஒரு நூதன காரியத்தைச் செ–தேன் நான் எழுதின ''இயேசு வந்த வீட்டில்'' என்ற புத்தகத்தை இருவருக்கும் அஞ்சலில் அனுப்பி விட்டு யேகோவாஷாலோமே நீர் பார்த்து கொள்ளும் என்று வாளா இருந்து விட்டேன்.

என்ன ஆச்சரியம்! புத்தகத்தை வாசித்த அவர்களுக்குள்ளே புத்தம் புதிய தெளிவு பிறந்தது. பிரிந்திருந்தவர்கள் தவறைப் புரிந்து கொண்டார்கள்.



அடுத்தவர் தலையிடாமலே அவர்களாகவே இணைந்து கொண்டார்கள். வாழ்க யேகோவாஷாலோம்.

என் அன்பு வாசகரே! உங்கள் குடும்பத்தில் அல்லது உங்களைச் சார்ந்தோரின் குடும்பத்தில் பிளவோ பிரிவோ இருக்கலாம். சமாதானம் போ–விட்டதே என்று புலம்பாதீர்கள். நீங்கள் தேடும் சமாதானம், உங்கள் அலங்கத்திற்குள்ளே ஓடிவரும்.

**பிள்ளைகளுக்குள்ளே :** அநேக குடும்பத்தில், ''என் பிள்ளைகளால் எங்களுக்கு சமாதானம் இல்லை'' என்ற புலம்பல் ஓங்கி நிற்கிறது. அப்படிப் பட்டவர்கள் யேகோவாஷாலோமை மறந்து விட்டார்கள் என்று தான் என்னுகிறேன்.

கர்த்தரின் வார்த்தையைக் கவனியுங்கள், ''உன் பிள்ளைகளின் சமாதானம் பெரியதாயிருக்கும்'' (ஏசா. 54 : 13) இது மாறாத ஒன்று. இதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். இயற்கையில் பிள்ளைகள் வளரும் பொழுது சற்று மூர்க்கமும் முரட்டாட்டமும் இருக்கத்தான் செ–யும். இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். ஒரு எட்டு மணி நேரம் தூங்குகிறார்கள். ஒரு எட்டு மணி நேரம் பள்ளியில், கல்லூரியில் இருக்கிறார்கள். ஒரு நாலு மணி நேரம் பயணம் மற்றும் வெளி உலகில் செலவிடுகிறார்கள். வெறும் நாலே மணி நேரம் தான் குடும்பத்தாருடன் செலவிடுகிறார்கள். இப்படியிருக்க உலக காரியங்களின் பாதிப்பு இருக்கத்தானே செ–யும்.

பிள்ளைகளிடத்தில் காணப்படும் குறைகளைக் கண்டு புலம்பிக் கொண்டிராமலும், அவர்களைக் குறித்து வேதத்தில் சொல்லப்பட்ட வாக்குத்தத்ததங்களைக் குறித்து துதித்துக்

கொண்டும் இருங்கள், எல்லாம் சரியா–ப் போ–விடும். மோசேயின் தா– அவனுக்குப் பால் ஊட்டி தேவனுக்கடுத்தவைகளை அறிவூட்டி தெ–வ பக்தியில் அனல் மூட்டி வளர்த்தாள். ஆனால் அடுத்து நடந்தது என்ன? அரண்மனைக்குப் போனான் எகிப்தின் சகல சாஸ்திரங்களையும் கற்றான். பார்வோனின் குமாரத்தியின் மகன் என்ற நிலையில் எகிப்தியனாகவே மாறிவிட்டான்.

அதற்காக மோசேயின் அப்பா, அம்மா அழுது புலம்பினார்களா? நலிந்தார்களா? இல்லை, உறுதியா– இருந்தார்கள். எகிப்தின் நைல் நதியிலிருந்து என் மகனைக் காப்பாற்றிய தேவன் எகிப்தின் அரண்மனையின் காரியங்களிலிருந்தும் விடுவிப்பார் என்று விசுவாசித்தார்கள்.

வேதத்தை திறந்து வாசித்துப் பாருங்கள், (எபிரெயர் 11 : 24–26) ‘‘மோசே **பெரியவனான** போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை **வெறுத்து**, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதை **தெரிந்து கொண்டு** இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக **பாக்கியமென்று எண்ணினான்**.

தேவன் எவ்வளவு நேர்த்தியா– செ–திருக்கிறார் பார்த்தீர்களா? இது தான் உன்பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்படடிருப்பார்கள் என்ற வார்த்தைக்கு உண்மைப் பொருள்.

இப்படியிருக்க எனக்கன்பானவர்களே! குணப்படாத அல்லது குணம் கெட்ட மகனோ மகளோ உங்களுக்கு



இருந்தால் அதனால் நீங்கள் வேதனைப்படாதீர்கள். உன் பிள்ளைகளின் சமாதானம் உனக்குப் பெரியதா– இருக்கும் என்ற யேகோவாஷாலோம் மோசேயை ஏற்ற வேளையில் மாற்றினது போல உங்கள் பிள்ளைகளையும் மாற்றுவார்.

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி தம்முடைய நாமத்தினிமித்தம் நீதியின் பாதைகளில் நடத்துகிறார் என்ற வசனத்தின்படி அவருடைய நாமம் அவகீர்த்தி அடையாதபடிக்கு தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும் பொருட்டு உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் நீதியின் பாதைகளில் நடத்துவார். மறந்து விடாதிர்கள்.

**எல்லைகளுக்குள்ளே :** உங்களில் உலகப் பிரகாரமான வீட்டின் எல்லைகளில், உங்களுக்கிருக்கும் நில புலன்களின் எல்லைகளிலும் யேகோவாஷாலோம் வெற்றிக் கொடியை ஏற்றுவார். அவர் உன் எல்லைகளை சமாதானமுள்ளவை களாக்கி உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார் (சங் 147:14) என்ற வசனத்தை வாசித்து கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டாடுங்கள்.

உங்கள் எல்லைகள் விசாலமாகுவதும், வலதுபுறமும், இடதுபுறமும் இடங்கொண்டு பெருகுவதும் தேவனுடைய விருப்பமும், வாக்குத்தத்தமுமா– இருக்கிறது. ஆனால் நிஜத்தில் பலபேருடைய வாழ்க்கையில் எல்லைத்தகராறுகள் நடந்துகொண்டுதான் இருக்கிறது. நாடுகளுக்கிடையே எல்லைப்பிரச்சனை இருப்பது போல குடும்பங்களுக்கு இடையேயும், சபைகளுக்கு இடையேயும் இந்த எல்லைப் பிரச்சனை தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது.

நீங்கள் யுத்தமின்றி அமைதலாக சுற்றிலும் சமாதானத்தோடு இருக்கவே தேவன் விரும்புகிறார். தாவீது

காலத்தில் ஓயாத யுத்தம் இருந்தாலும் சாலமோன் காலத்தில் தேசம் யுத்தமின்றி அமைதலா– இருந்தது என்ற வேத வசனம் என் இதயத்திற்கு மிகுந்த ஆறுதலாக இருக்கிறது.

இவன் என்னிடத்திற்கு வரக்கூடாது, இது எல்லாம் எனது இடம் என்று சில போதகர்களே மற்றப் போதகர் மேல் போர் தொடுப்பதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். இந்த வழக்கை தீர்த்து முடிப்பதற்குள்ளேயே வயது ஒன்று கூடி விடுகிறது. தேசத்தை சாலமோன் ஆண்டால் யுத்தம் இருக்காது என்பதை நினைப்பூட்ட விரும்புகிறேன்.

சாலமோன் என்றால் சமாதானப்பிரபு என்று அர்த்தம், சமாதானபிரபுவாகிய கிறிஸ்து முழுவதுமாக நம்மை ஆளுகை செ–கிற பொழுது, சமாதானத்தின் ஆவியானவரின் ஆளுகைக்குள் நாம் இருக்கும் பொழுது நம்முடைய எல்லைகள் சமாதானமாகவே இருக்கும்.

யேகோவாஷாலோம் சமாதானத்தை உண்டு பண்ணுகிறார். ஆனால் அந்த சமாதானத்தை காப்பதும் வளர்ப்பதும் நம்முடைய கரத்தில் இருக்கிறது.

நம்முடைய இரட்சகர் இயேசு உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும், வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷனால் மிதிக்கப்படுவதற்கு மேயொழிய வேறொன்றுக்கும் உதவாது (மாற்கு 9 : 50) என்று சொன்ன ஆண்டவர், உங்களுக்குள்ளே உப்புடையவர்களா– இருங்கள், என்று சொன்னதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமக்குள் இருக்க வேண்டிய உப்பு என்ன தெரியுமா? அதை அறிய வேண்டுமாகில் அந்த வசனத்தின் பிந்தின பகுதியை கவனித்துப் பாருங்கள்.

**உங்களுக்குள்ளே உப்புடையவர்களா–**, இருங்கள்,



ஆம்! நாம் சமாதானமுள்ளவர்களா– இருக்க வேண்டுமென்பது தேவனுடைய ஆலோசனை அல்ல, எச்சரிப்பு என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உப்பானது சாரமற்றுப் போனால் வெளியே கொட்டப்படுவது போல சமாதானம் இல்லாத கிறிஸ்தவர்கள் கர்த்தரால் வெளியே தூக்கி எறியப்படுவார்கள் என்பதே அந்த எச்சரிப்பு.

எனவே பிரியமானவர்களே! சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்று முடிய காப்பாராக, என்று வாழ்த்துகிற பவுல் யாவரோடும் சமாதானமாயிருக்க நாடுங்கள் என்று சொன்னதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த யேகோவாஷாலோம்

1. உங்கள் அலங்கத்திற்குள்ளே

2. உங்கள் பிள்ளைகளுக்குள்ளே

3. உங்கள் எல்லைகளுக்குள்ளே

சமாதானத்தை பரிபூரணமாக தந்தருள்வாராக.

இனி கொடுமை உன் தேசத்திலும், அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்பட மாட்டாது என்ற ஏசா 60 : 18 ஐ வாசித்துக் கொண்டே

யேகோவாஷாலோம்

சமாதானம் தருகிறீர்

ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

என்று பாடிப் பரவசமடையுங்கள். யேகோவாஷாலோம் சமாதான நதியில் நீங்கள் நீச்சல் அடிக்க உதவுவாராக.

# 5. பரிகாரரியாகிய கர்த்தர்

நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் என்ற நான்காவது வசனத்தைக் கவனித்துப் பாருங்கள்.

வேதத்தில் பல பள்ளத்தாக்குகளைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. பெராக்கா என்றால் ஆசீர்வாதப் பள்ளத்தாக்கு, அழுகை நிறைந்த பள்ளதாக்கு என்பவைகள் அவற்றுள் சில, இங்கே மரண இருளின் பள்ளத்தாக்கு என்ற ஒன்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

மரணம் என்பது இருள் நிறைந்த பள்ளத்தாக்கு என்பதை சங்கீதக்காரன் அறிந்திருந்தாலும் கர்த்தர் தன்னோடே கூட இருக்கிறார் என்பதை நிச்சயித்துக் கொண்ட அவன் இந்தப் பொல்லாப்புக்கு பயப்பட மாட்டேன் என்று சவால் விடுகிறான்.

மனிதன் தனக்கு வரும் எந்தத் துன்பத்தையும் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறான், அல்லது சமாளித்து விடுகிறான். அழுகை நிறைந்த பள்ளத்தாக்கா– இருந்தால் கூட அதன் உருவே நடந்து சாதனைப் படைத்து விடுகிறான். ஆனால் இந்த இருளின் பள்ளத்தாக்கை எதிர்கொள்ள எவருக்குமே தைரியம் வருவதில்லை.

ஒரு மனிதனுக்கு ஏற்படுகிற வியாதிப் படுக்கையே அவனை எதிர்கொள்கிற இருளின் பள்ளத்தாக்கு, இயற்கையின் படியும் தேவனுடைய தண்டனையின் படியும் வியாதிக்கடுத்து, மரணம் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் தெளிவா– அறிந்திடல் வேண்டும்.

எலிசா மரணத்திற்கேதுவாக வியாதிப்பட்டிருந்தான்



என்ற வசனத்தின் மூலமாகவும் உங்களில் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். (1 கொரி 11 : 30) என்ற வசனத்தின் மூலமாகவும் இஃதினை அறிந்து கொள்கிறோம்.

எப்பேர்ப்பட்ட வீரனாக இருந்தாலும். பக்தனாக இருந்தாலும், தனக்கு மரணம் வரப்போகிறதை அறியும் பொழுது அதை சந்திக்க அஞ்சி அழுகிறான் என்பது உண்மையானதே. எசேக்கியா ராஜா வியாதிப் படுக்கையில் இருந்த பொழுது ஏசாயா தீர்க்கதரிசி அங்கே வருகிறார். நீர் மரித்துப் போவீர் என்று தீர்க்கதரிசனம் உரைக்கிறார். அவ்வளவு தான் எசேக்கியா ஆடிப்போ– விட்டார். சுவற்றின் பக்கமாகத் திரும்பி அழ ஆரம்பித்து விட்டார்.

ஆனால் மரண இருளின் பள்ளத்தாக்கு வந்தாலும் பொல்லாப்புக்கு பயப்பட மாட்டேன் என்று தாவீது அழுத்தமாகப் பாடினார், காரணம் தான் விசுவாசிக்கும் ஆண்டவர் எப்படிப்பட்டவர் என்பதை தெளிவாக அறிந்திருந்தார்.

நம்முடைய ஆண்டவர் மே–ப்பர், போஷகர், தேற்றரவாளன், என்பது மாத்திரமல்ல அவருடைய கிருபைகளுக்கும், கிரியைகளுக்கும் இன்னொரு பரிமாணமும் உண்டு. அதை அவரே சொல்கிறார் கவனியுங்கள்.

நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத். 15 : 26). ஆஹா! எவ்வளவு பெரிய சிலாக்கியம் பார்த்தீர்களா நம்முடைய ஆண்டவர் நமக்கு வைத்தியராக இருக்கிறார். ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு மாத்திரமல்ல, உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரைக்கும் உள்ளேயும் புறம்பேயும் அனைத்து வியாதிகளையும் குணமாக்கும் அற்புதமான வைத்தியர்.

உங்களுக்கு எற்பட்டுள்ள வியாதியைக் குறித்தோ, அந்த

வியாதியைக் குறித்து உங்கள் மருத்துவர் சொன்ன அறிக்கையைக் குறித்தோ கவலைப்பட வேண்டாம். கர்த்தருடைய வசனம் சொல்வதைக் கவனியுங்கள்.

இதோ நான் அவர்களுக்கு, சௌக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களை குணமாக்கி, அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும்... வெளிப்படுத்துவேன். I will bring it health and cure and I will cure them. (எரே 33 : 6) இதைவிட வேறென்ன நமக்கு வேண்டும். இதை விசுவாசியுங்கள். தேவன் உங்களை மரணபள்ளத்தாக்கிலிருந்து தூக்கி எடுப்பார்.

இப்பொழுதெல்லாம் புதுப்புது வியாதிகள் தோன்றுகிறது. யோசித்துப் பார்க்க முடியாத இதுவரை கேட்டறியாத வியாதிகளெல்லாம் தினம், தினம் முளைத்துக் கொண்டு வருகிறது.

என்னுடைய வீட்டிற்கு கிறிஸ்தவராகிய ஒரு சித்த வைத்தியர் அடிக்கடி வருவார் ஒருநாள் அவரிடம் தற்போது என்ன செ–கிறீர்கள் என்று கேட்டேன், ‘‘இப்பொழுது ஒரு புதிய ஆரா–ச்சியில் இறங்கியிருக்கிறோம். இன்னும் கொஞ்ச காலத்தில் ஒரு புதுவிதமான நோ– வரப்போகிறது. அது என்ன தெரியுமா? மனிதனுடைய நாவில் உமிழ்நீர் சுரக்காது அதனால் செரிமானம் உட்பட பல்வேறு அசௌகரியங்கள் மனிதனுக்கு வரப்போகிறது என்று’’ படுசீரியஸாக சொன்னார்.

அப்படி ஒரு வியாதி வருவது மிகவும் நல்லது என்றேன். அவர் அதிர்ச்சியுற்று ஏன்? என்றார். வாயில் எச்சில் சுரக்கவில்லையென்றால் நாட்டில் ஜொல்லு பார்ட்டிகள் குறைந்து விடும் என்றேன். சிரித்துக் கொண்டே சுதாரித்துக் கொண்டார்.



எத்தனை வியாதிகள், அத்தனை வியாதிக்கும் பரிகாரம் நமது கர்த்தரிடத்தில் உண்டு. அவர் செட்டையின் கீழ் ஆரோக்கியம் இருக்கிறது. அவருடைய தழும்புகளால் நாம் எப்போதும் குணமாகிறோம்.

தேவனுக்கு எல்லாமே, லேசான காரியம். பெலன் உள்ளவன், பெலன் அற்றவன் யாராக இருந்தாலும் உதவிகள் செ–வது அவருக்கு லேசான காரியம். இதில் நீங்கள் மட்டும் விதி விலக்கல்ல.

சில வேளைகளில் பயந்து பதறி தவிக்கிறோம். ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கர்த்தருடைய வசனத்தை சரியா– வாசிக்கிறவனும், விசுவாசிக்கிறவனும் வியாதியைக் குறித்து, வியாதியினால் வரக்கூடிய மரணத்தைக் குறித்து பயப்பட மாட்டான்.

இதை எழுதுகிற உனக்கு வியாதி இல்லையா என்று நீங்கள் கேட்டால், நான் கோபித்துக் கொள்ள மாட்டேன். சாவுக்கேதுவான என் சரீரத்தில் பல வியாதிகள் உண்டு, ஆனால் சாவுக்காக நான் பயப்படவில்லை.

பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோ–க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பா– என்ற சங். 91 : 5, 6 என் உள்ளத்தில் மிகப் பெரிய நங்கூரமா– இருக்கிறது.

கர்த்தருடைய வசனத்தை நான் சாதாரணமாக வாசிப்பது கிடையாது அசாதரணமாக யோசிப்பேன். அதனால் ஆண்டவரின் அற்புதங்களை நினைத்து அர்த்தராத்திரியிலும் ஆட்டம் போட்டு துதித்திருக்கிறேன்.

மார்த்தாள், மரியாள் ஆகியோரின் சகோதரனாகிய லாசரு மரித்துப் போனார், அடக்கமெல்லாம் முடிந்துவிட்டது

நான்கு நாட்கள் கழித்துதான் இயேசு வந்தார் என்று வேதம் சொல்லுகிறது. அதாவது 96 மணி நேரம் கழித்து இயேசு வந்தார்.

சற்று யோசித்துப் பாருங்கள்! ஒருவன் மரித்து 96 மணி நேரம் ஆனால் என்ன நடக்கும்? ரத்தம் உறைந்து உடல் அழுகிப் போகும். உடல் என்று பொதுவாக சொல்லுவதைவிட உங்களுக்கு அனல் மூளும்படி பிரித்து, பிரித்து, சொல்ல விரும்புகிறேன்.

அவன் கண்கள் அழுகிப் போனது இதயம் அழுகிப்போனது, நுரையிரல் அழுகிப் போனது, சிறுநீரகங்கள் அழுகிப் போனது.

ஆனாலும் ஆண்டவர் அவனை அழைத்த அடுத்த நிமிடத்தில் அழுகிப்போன அவனுடைய அனைத்து அவையவங்களும் அதனதன் செயல்பாட்டுக்கு திரும்பிவந்தது.

தெ–வ பிள்ளையே துள்ளிக்குதியுங்கள், துக்க சால்வையை தூக்கி எறியுங்கள். செத்தவனுடைய அழுகிப்போன அவயங்களையே புதுப்பிக்க தேவனால் முடியுமென்றால் உயிரோடு இருக்கிற உன்னுடைய சரீரத்தின் பழுதடைந்த பாகங்களை, தன் பணிக்குப் புதுப்பிக்க அவரால் முடியாதா? அவரால் முடியும்! அது அவருக்கு லேசான காரியம்.

இதை வாசிக்கும்பொழுதே உங்கள் கண்கள் தெளிவடையும். பழுதுற்ற நுரையிரல் பெலனடையும். பங்கமுற்ற இதயம் செயல்படும். சீர்கெட்ட சிறுநீரகங்க ள் சரிபடும். ஏன் தெரியுமா? அவர் நானும் உன் பரிகாரியாகிய கர்த்தர் என்று சொல்லாமல்! நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்று சொல்லியிருக்கிறார்!.

அல்லோபதி, ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேதா, யுனானி, அக்கு பஞ்சர் என்று அத்தனை வைத்திய முறைகளும்



உன்னைக் கைவிட்டாலும் இந்த பிரகஸ்பதி உன்னை கைவிட மாட்டார்.

ஒரு உண்மைச் சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆறு மாத கர்ப்பிணி சகோதரி ஒருவர் திடீரென்று வியாதிப்பட்டு மோசமான நிலைக்குள்ளானார்கள். அவரை சோதித்துப்பார்த்த அரசு மருத்துவர்குழு வயிற்றுக்குள்ளேயிருக்கும் குழந்தை இறந்து நாட்கள் ஆகிவிட்டது தற்போது இருக்கும் தங்களின் உடல் நிலையில், நாங்கள் திட்டமாக யோசித்து தான் முறையான வைத்தியத்தை செ–ய முடியும் என்று கை விரித்து விட்டனர்.

மருத்துவமனையிலிருந்து அவரது நிலை மேலும் கவலைக்கிடமானது. இந்நிலையில் ஒரு போதகர் அவருக்காக ஜெபிக்கும்படி சென்றார். கிறிஸ்துவை அறியாத அந்த சகோதரிக்கு சத்தியத்தைச் சொன்னார். சத்தியத்தைக் கேட்கும் அளவிற்கு நினைவு இருக்கிறதா என்பதைக் குறித்து கவலைப்படவில்லை. சத்தியத்தைச் சொல்லி ஜெபித்து விட்டு திரும்பி விட்டார்.

அன்று இரவு மருத்துவர்கள் வந்து பார்த்தபொழுது இவர் மரித்து விட்டார், இவரை இங்கிருந்து அப்புறப்படுத்துங்கள் என்று சொன்னார்கள். மருத்துவமனை பணியாளர்கள் அவரைக் கொண்டுபோ– சவக் கிடங்கில் போட்டு விட்டார்கள். அடுத்த நாள் காலையில் உள்ளே நுழைந்த மருத்துவப் பணியாளர்களுக்கு பெரிய அதிர்ச்சி. இரவில் பிணமாக கொண்டு வந்து போடப்பட்டவர் கைகளையும் கால்களையும் அசைத்துக் கொண்டிருந்தார். மட்டுமல்ல வயிற்றுக்குள் மரித்திருந்த குழந்தை தானாக வெளியேறி இருந்தது.

அவ்வளவுதான்! மருத்துவமனைக்குள் செ–தி பரவியது.

சவக்கிடங்கில் கிடந்தவரை மருத்துவ அறைக்குள் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தொடர் வைத்தியம் செ–தார்கள். அவர் பிழைத்துக் கொண்டார். இன்றும் ஜீவனோடிருக்கிறார். எங்கள் சபையில் குடும்பமாக கர்த்தரை சேவித்து வருகிறார்.

இதை நான் எழுத ஒரு காரணம் உண்டு மரித்துவிட்டார் என்று மருத்துவர்கள் முடிவு கட்டிவிட்டார்கள். சவக்கிடங்கில் பிணங்களுக்கிடையில் படுக்கவும் வைத்து விட்டார்கள். பிரேதக்குழிவெட்ட கணவன் பணமும் கொடுத்துவிட்டார். அடுத்த நாள் அடக்கம் நடக்க வேண்டியதுதான் மிச்சம்.

இப்படியிருக்க ஒரு ஊழியக்காரனின் ஜெபத்தைக் கேட்டு, உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத நிலையில் உள்ள உள்ளத்தைப் பார்த்து மனமிரங்கி அற்புதம் செ–த ஆண்டவர் கதறி அழும் உங்கள் ஜெபத்தைக் கேட்காமல் காதைப் பொத்திக் கொள்வாரா? உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும் ஊழியர்களின் முகத்தைப் பார்க்காமல் கண்ணை மூடீக்கொள்வாரா? மாட்டாரே.

உங்கள் கண்ணீர் கா–ந்து போவதில்லை. உங்கள் ஜெபங்களுக்கு நிச்சயமாகவே பதில் உண்டு. முழு வேதாகமத்திலும் தெ–வீக சுகத்தைக் குறித்து எவ்வளவு வாக்குத்தத்தங்கள் இருக்கிறது தெரியுமா?அத்தனையும் உங்களுக்கு சொந்தமானவைகள்.

★ நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்.

★ வியாதியைவரப்பண்ணேன்.

★ வியாதியை உன்னைவிட்டு விலக்குவேன்.

★ வாதை உன் கூடாரத்தை அணுகாது.



★ யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை.

★ கொள்ளை நோ–க்கு பயப்படாதிருப்பா–.

★ உன் நோ–களை யெல்லாம், குணமாக்கி.....

★ நீடித்த நாட்களால் உன்னை திருப்தியாக்குகிறார்.

★ உன் அரண்மனைக்குள்ளே சுகமும் இருப்பதாக.

★ உனக்கு விரோதமான எந்த ஆயுதமும் வா–க்காதே போகும்.

★ அவர் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் உண்டு.

★ அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.

★ வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பீர்கள்.அவர்கள் சுகமாவார்கள்.

★ விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்.

★ நான் உன்னை விடுவிப்பேன்.

இப்பேர்ப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்ற நாம் கவலைப்படலாமா? கண்ணீர் வடிக்கலாமா? மேலே குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை திரும்பத்திரும்பச் சொல்லிச் சொல்லி கர்த்தரைத் துதியுங்கள்.

யேகோவா ரஃபா–
சுகம் தரும் தெ–வமே–
கலங்கமாட்டோம்–நாங்க
கதறமாட்டோம்

என்று பாடி, ஆடி, கூடி, துதியுங்கள். யேகோவா ரஃபா பரிபூரண சுகத்தை உங்களுக்கு அருளுவார்.

# 6. வெற்றி தரும் கர்த்தர்

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பிவழிகிறது.

நம்முடைய ஆண்டவர் யார்? சாத்தானின் தலையை கல்வாரி சிலுவையில் நசுக்கிய வெற்றி வேந்தன். பிரதான சத்துருவை வென்று, நம்மை விடுதலை செ–த கர்த்தர், நம்மைச் சூழ்ந்திருக்கும் சகல சத்துருக்கள் கையிலிருந்தும், நம்மை விடுதலையாக்க வல்லவராகவும் இருக்கிறார்.

சத்துருக்களுக்கு முன்பாக ஒரு பந்தி, என்ற வார்த்தைக்கு பொருள் என்ன தெரியுமா? என் எதிராளிகளுக்கு முன்பாக எனக்கு ஒரு வெற்றி விழா ஏற்படுத்துகிறார் என்பதே. உங்கள் எதிராளி எப்படிப்பட்டவர் என்பதோ, எந்த முறையில் யுத்தம் செ–கிறார் என்பதோ முக்கியமே கிடையாது, எங்கும் எவரையும், எதையும் வீழ்த்த நம்முடைய ஆண்டவர் போதுமானவர்.

★ நம்முடைய ஆண்டவர் யார் தெரியுமா?

★ சேனைகளின் கர்த்தர்

★ யுத்தத்தில் வல்லவர்

★ பராக்கிரமசாலி

இப்படியிருக்க நாம் ஏன் யுத்தத்திற்கு அஞ்ச வேண்டும். நீங்கள் சும்மாயிருப்பீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செ–வார் என்பது வேதம் தருகிற போதனை.

உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சத்துரு உங்களை எந்த விதத்திலும் நெருங்க முடியாது. எல்லாப்



பக்கங்களிலும் உங்கள் பாதுகாப்பிற்கான சகல ஏற்பாடுகளையும், பாங்கா– அவர் செ–திருக்கிறார்.

உங்களுக்கு எதிரே சத்துரு வரமுடியாது. வந்து உங்களைத் தாக்க முடியாது. காரணம் இந்த நல்ல மே–ப்பன் உங்களுக்கு முன்னே நடந்து போகிறார். என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் என்ற வசனத்தின்படி அவருடைய சமூகம் உனக்கு முன்னே நிற்பதினால் உங்கள் எதிராளி உங்களுக்கு முன்னே வரமுடியாது.

உங்கள் சத்துரு உங்களுக்கு இடப்பக்கமாகவோ, வலப்பக்கமாகவோ வரமுடியாது. நம்முடைய மே–ப்பனைக் குறித்து சற்று கற்பனை செ–து பாருங்கள். ஒருகையில் கோல், மறுகையில் தடி வைத்திருக்கிறார், அற்புதமான மே–ப்பன் அவர். உங்கள் இடப்பக்கமோ வலப்பக்கமோ சத்துரு வந்தால், அவர் கரங்கள் சும்மா இருக்காது. கைகளில் இருக்கிற ஆயுதங்களை சும்மா வைத்துக்கொண்டா இருப்பார். உங்களுக்காக தடியடியே நடத்துவார். உன்பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபக்கத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது. துன்மார்க்கருக்கு வரும் பலனை மட்டும் நீ காண்பா– என்ற வசனத்தை மட்டும் நெஞ்சில் நிறுத்தி சிந்தியுங்கள்.

அப்படியானால் பின்னாலே வந்து முதுகில் குத்துவானா என்று நீங்கள் அஞ்ச வேண்டாம். ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் உங்களைப்பின் தொடருகிறது என்பதை நினைத்து கர்த்தரில் களி கூறுங்கள்.

வனாந்திரத்தில் இஸ்ரவேலருக்கு முன்னே சென்ற அக்கினி ஸ்தம்பம் திடீரென்று முன்னேயிருந்து விலகி விட்டது, அப்படியானால் கர்த்தர் விலகிவிட்டார் என்பது அர்த்தமல்ல

அந்த அக்கினி ஸ்தம்பம் அப்படியே இஸ்ரவேலருக்குப்பின்னாக வந்து நின்று விட்டது. இவர்களுக்கு விளக்காகவும் அவர்களோடு வழக்காடவும் அந்த ஸ்தம்பம் இஸ்ரவேலருக்கு பின்னாக நின்றதுபோல கர்த்தருடைய கிருபை உங்கள் பின்னால் நிற்கிறது என்பதை நன்றா– புரிந்து கொள்ளுங்கள்.

நம்ம ஊர் மக்கள் வேப்பமரத்திலும் புளிய மரத்திலும் பே–கள் தொங்கிக் கொண்டிருப்பதாக நம்முடைய மூளையில் பதிவு செ–து விட்டார்கள். ஒருவேளை மேலேயிருந்து பிசாசு நம் தலைமேலே குதித்து விடுவானா? என்று நீங்கள் அஞ்சவேண்டாம். முன்னே கர்த்தரின் சமூகம், பின்னே நன்மையும் கிருபையும், இடப்பக்கமும் வலப்பக்கமும் கோலும் தடியும், இருப்பதுபோல உங்கள் தலைக்கு மேலே ஒன்று இருக்கிறது.

அது என்ன தெரியுமா? அது விசேஷமானது, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் என்ற வசனத்தின்படி கர்த்தருடைய அபிஷேகமும் உங்கள் சிரசின் மேல் இருக்கிறது. அபிஷேகத்தில் வித்தியாசம் உண்டு. பழைய ஏற்பாட்டில், ராஜாக்களுக்கு தனி அபிஷேகம், தீர்க்கதரிசிகளுக்கு தனி அபிஷேகம், ஆசாரியரிகளுக்கு தனி அபிஷேகம். ஆனால் இவர்களெல்லோரும் வெறும் எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்.

புதிய ஏற்பாட்டுக்காரராகிய நமக்கோ தேங்கா– எண்ணெயாலோ, ஒலிவ எண்ணெயாலோ அபிஷேகம் செ–யாமல் என்றும் மாறா, தம்முடைய உன்னத ஆவியினால் அபிஷேகம் பண்ணியிருக்கிறார். எனவே சத்துரு உன் தலையின் மேல் உட்கார முடியாது என்பது மாத்திரமல்ல சுண்டுவிரலைக் கூட வைக்க முடியாது என்பதை திட்டமா– நம்புங்கள்.



சில அறிவு ஜீவிகள் இப்படி யோசிக்கலாம். மண்ணுக்கடியிலேயே சுரங்கப்பாதை அமைத்து நம் காலை அவன் இழுத்து விட்டால் என்ன செ–வது? அப்படி அவன் சுரங்கப் பாதை அமைத்து உங்கள் காலை நோக்கி நகர்ந்து வந்தால் கர்த்தர் மகா சந்தோஷப்படுவார். பேஷ், பேஷ் ரொம்ப நன்னாயுருக்கு, இதைத்தான் நான் எதிர்பார்த்தேன், என்ற நரசுஸ் காப்பி விளம்பரத்தைப்போல ஆண்டவர் நகைப்பார்.

ஆண்டவர் நகைப்பாரா? என்ற ஆச்சரியம் எழும்புகிறதா? சத்துருவை உங்கள் பாதபடியில் கொண்டு வருவதே அவர் திட்டம், ரோம. 16:20ல் பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.

சமாதானத்தின் தேவன் சீக்கிரமா–ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்.

ஆகவே பிரியமானவர்களே! எப்பக்கம் நெருக்கப் பட்டாலும் நீங்கள் நொறுங்கிப் போவதில்லை. எத்தனைக் கோலியாத்துக்கள் எழும்பினாலும் வெட்கப்படமாட்டீர்கள். மாறாக வென்று குவிப்பீர்கள். நம்முடைய ஆண்டவர் யுத்தத்தில் வல்லவர். முன்னரே எழுதியிருந்தேன். அவரது யுத்தம் விசேஷமானது, வித்தியாசமானது, வீரியமானது. இப்பொழுது நடக்கிற யுத்தங்களை ஸ்டார்வார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நட்சத்திரங்களே யுத்தம் செ–தது என்று உங்களுக்குத் தெரியுமா? பாராக்கும் தெபோராளும் சிசெராவுக்கு விரோதமாக யுத்தத்திற்குச் சென்று யாகேல் என்பவரின் உதவியோடு வெற்றியைப் பெறுகிறார்கள்.

இந்த வெற்றியைக் குறித்து தெபோராள் பாடிய பாட்டைக் கவனியுங்கள். வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம் பண்ணின (நியா. 5 : 20) உங்களுக்காக ஒரு நட்சத்திர

யுத்தத்தையே நடத்த வல்லவர் நம்முடைய ஆண்டவர்.

**சத்தத்தின் மூலம் யுத்தம்:** சமாரியா முழுவதிலும் சத்துருக்கள் பாளயமிறங்கியிருந்தனர். சமாரியாவிலே கொடிய பஞ்சமும் வேதனையும் மிகுந்திருந்தது. என்ன நடந்தது தெரியுமா? பாளயத்தில் படுக்கையில் இருப்பவர்களின் காது ஒரு வித நூதன சத்தம் கேட்க ஆரம்பித்தது. சமாரியாவின் சேனை நெருங்கி வருகிறது என ஒருவன் மற்றொருவனைப் பார்த்து சொல்ல அடுத்தவன் ஆமாம் போட அடுத்த நிமிடமே அதை அங்கங்கேயே விட்டு விட்டு அனைவரும் ஓடிப் போயினர். அடுத்த நாள் விடியலில் அங்கே போன குஷ்டரோகிகள் பாளயம் வெறுமையா– உள்ளது என்று கண்டு வந்து சொல்ல சமாரியர் ஓடிச் சென்று சத்துருக்களுடையதை வாரிக்கொண்டு வந்தனர்.

எனக்கன்பானவர்களே! உங்களைச் சுற்றி எழுந்து நிற்கும் சத்துருக்களைக் குறித்து நீங்கள் பயப்படத் தேவையில்லை. அவர்கள் பயப்படும்படி நீங்கள் சத்தம் போடத் தேவையில்லை. உங்கள் எதிராளிகள் துரத்துவாரின்றி ஓடும்படி தேவன் தமது யுத்த சத்தத்தை அனுப்புவார். அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தாலும் துடித்தெழுவார்கள். துள்ளிக் கொண்டு ஓடுவார்கள்.

**மவுனத்தாலே யுத்தம் :–** எதிராளிகளை முட்டாள் ஆக்குவதில் நமது ஆண்டவர் மிகச்சிறந்தவர். தம்முடைய ஜனங்களுக்கு அவர் சொல்லிக் கொடுத்ததைக் கவனியுங்கள். இந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் வா–க்காலை வெட்டுங்கள். (வாயும், காலையும் அல்ல) நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள். மழையையும் காணமாட்டீர்கள் அப்படியே இஸ்ரவேலர் வா–க்காலை வெட்டினார்கள். இரவோடு இரவாக வா–க்கால் முழுவதும் தண்ணீரால் நிரம்பியது.



பொழுது விடிந்தது தூரே இருந்து பார்த்த எதிராளிகள் ஓர் புதுமைக் காட்சியைக் கண்டனர். வா–க்கால் முழுவதும் உள்ள தண்ணீரின் மேல் காலைச் சூரியனின் கதிர்கள் பட்டபோது ஒளி விலகல், மற்றும் ஒளி பிரதிபலித்தல் தத்துவத்தின்படி சிவப்பு நிறமாக அவர்கள் கண்களுக்குப் பட்டது. அவர்களோ தப்புக் கணக்கு போட்டு விட்டனர். ஒருவனை ஒருவன் வெட்டிக் கொண்டான். இரத்த வெள்ளத்தில் மிதக்கிறார்கள் என்று ஒருவன் தினத்தந்தி பாணியில் செ–தி வாசிக்க அத்தனை பேரும் ஆயுதமின்றி அவசரமா– அங்கே போனார்கள்.

இதுதான் சமயமடா என்று இஸ்ரவேலர் எழும்பி அவர்களை வெட்டி வீழ்த்தினர். **இப்படியே உங்கள் சத்துருக்களை முட்டாள்களாக்கி உங்கள் முன்பு வீழ்ந்து விழ தேவன் கிரியைகள் நடப்பிப்பார்.**

இந்த யுத்தத்தில் வல்லவர் செ–கின்ற இன்னொரு முறை உண்டு. வேதத்தில் எழுதப்பட்டிருக்கிற அவனவன் தன்தன் பட்டயத்தை எடுத்து அவனுக்கடுத்தவனை வெட்டினான். இப்படி இஸ்ரவேலரின் எதிராளிகள் அழிந்து போனார்கள். உங்களுக்கு விரோதமாக எவரேனும் கூட்டணி அமைத்தால் கவலைப்படாதீர்கள். ஏற்ற காலத்தில் ஏற்ற விதத்தில் கூட்டணியை கூட முடியாதபடி உடைப்பதற்கு அவர் வல்லவராக இருக்கிறார்.

இந்த தேவனுக்கு மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி ஒரு பெயர் வைத்தான். என்ன பெயர் தெரியுமா? ‘‘யேகோவாநிசி’’ என்பதே அஃது அதன் பொருள் என்ன தெரியுமா? ‘‘கர்த்தர் என் வெற்றிக்’’ கொடி, எல்லா இடங்களிலும் வெற்றி பெறச்

செ–கிற, வெற்றிக் கொடியேற்றுகிற தேவன் உங்களோடு இருக்கும் போது நீங்கள் தோற்றுப் போவீர்களா? தோற்றது போல் தெரியும், தோற்பது போல் தெரியும். ஆனாலும் ஒருவராலும் உங்களை மேற்கொள்ள முடியாது. மனித சக்தியானாலும் சரி, மந்திரவாதமானாலும் சரி சகலத்தையும் மிதிக்கும், சகலத்தையும் ஜெயிக்கும் உங்களுக்குள் இருக்கிறது.

யேகோவா நிசியே–

எந்நாளும் வெற்றிதருவீர்

ஸ்தோத்திரமே – அப்பா

ஸ்தோத்திரமே

என்று ஸ்தோத்திரியுங்கள், துதியுங்கள், சிறையிருப்புகள் சிதறும், எரிகோக்கள் தகரும்.

# 7. கூடவே இருக்கும் கர்த்தர்

இந்த சங்கீதத்தின் கடைசி வசனம் எனக்கு பெரிய மகிழ்ச்சியைத் தருகிறது. **நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களா– நிலைத்திருப்பேன்,** என்பது எவ்வளவு பெரிய பாக்கியம் தெரியுமா?

கர்த்தருடைய வீடு என்பதால் மோட்ச வீட்டைக் குறித்த வாசகம் என்று நீங்கள் எண்ணினால் அதில் தவறொன்று மில்லை. இங்கே சொல்லப்பட்ட கர்த்தருடைய வீடு என்பது பரலோகத்தில் உங்களுக்கு தற்போது இருக்கிற வீடே கர்த்தரின் வீடு என்பது. நம்புவதற்கு சற்று சிரமம் இருக்கலாம். அந்த வசனத்தின்முன் பகுதியை வாசித்துப் பாருங்கள். ஜிவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் என்று எழுதியிருப்பதினால், நன்மையும் கிருபையும் இந்த பூலோகத்தில் நீங்கள் அனுபவிக்கிற இடம் எதுவோ, அதுவே கர்த்தரின் வீடு.

நீங்கள் ஆராதிக்கிற சபையை கர்த்தரின் வீடு என்று நீங்கள் சொல்லலாம். அதில் தவறு இல்லை. ஆனாலும், நீர் தங்கி இருக்கிற இடம் எதுவோ அது 10 X 10 அடி அறையா– இருந்தாலும், அதை தம்முடைய வீடாக கர்த்தர் அங்கீகரிக்கிறார்.

இந்த வசனத்தில் இந்த தேவனுக்கு யேகோவாஷம்மா என்று எபிரெய பதத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த யேகோவாஷம்மா என்ற வார்த்தையை தமிழில் மொழிபெயர்க்க மிக சிரமப்பட்ட நாட்கள் உண்டு. தேவன் அங்கே இருக்கிறார். தேவன் தமது வீட்டில் இருக்கிறார் என்றெல்லாம் பலர் மொழி பெயர்த்தனர். ஆனால் அந்த மொழி

பெயர்ப்புகளின் மூலம் அந்த நாமத்தின் உன்னத நிலையை வெளிப்படுத்த முடியவில்லை.

தமிழகத்தில் கர்த்தர் எழுப்பித் தந்துள்ள அருட்தந்தை பெர்க்மான்ஸ் அவர்களுக்கா– கர்த்தரைத் துதிக்கிறேன். அவருடைய பாடல்களில் சிலவற்றைக் கண்டு பிரமித்திருக்கிறேன். 52 வாரங்கள்வேத பாடம் நடத்தி, ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்த விளக்கத்தை மக்கள் உள்ளத்தில் பதிய வைக்க முடியாமல் திணறிப் போன எனக்கு தெ–வீகக் கூடாரமே என்ற பாடல் மிகுந்த ஆச்சரியத்தை எழுப்பியது. அந்தப் பாடலை முதன்முறை கேட்டு விட்டு, சந்தோஷத்தில் நாற்காலியின் மேல் ஏறி நின்று கொண்டேன். அந்த அளவிற்கு இறையியல் தத்துவங்கள் விளக்கப் பட்டுள்ளது.

இதைப் போலவே ''கர்த்தர் நாமம் என் புகலிடமே'' களி கூர்ந்து துதித்திடுவேன் என்ற பாடல். அந்தப் பாடலில் யேகோவாயீரே யேகோவாஷாலோம், யேகோவாநிசி யேகோவா ரஃபா என்ற அர்த்தத்துடன் கவிகளை அமைத்தவர் யேகோவாஷம்மா என்ற வார்த்தைக்கு **கூடவே இருக்கிறீர்** என்று சுருக்கமான, சுவையான மொழி பெயர்ப்பைத் தந்துள்ளார்.

கர்த்தருடைய வீட்டில் நிலைத்திருப்பேன் என்றால் அர்த்தம் என்ன தெரியுமா? என்னோடு கர்த்தர் வாசம்பண்ணுகிறார். இல்லை கர்த்தரோடு நான் வாசம் பண்ணுகிறேன். இல்லை இல்லை நானும் கர்த்தரும் சேர்ந்தே வாசம் பண்ணுகிறோம். ஆஹா! எத்தனை இன்பம், இதை எண்ணும் போதே என் உள்ளம் எல்லையில்லாமல் மகிழ்ச்சியில் பொங்குகிறது.

பெற்றோர் நம்மை விட்டுப் போ– இருக்கலாம். பெற்ற



பிள்ளைகள் நம்மை விட்டு விலகி இருக்கலாம். நண்பர்கள் நஞ்சை கக்கியிருக்கலாம். உறவினர்கள் உருவக்குத்தலாம், எந்த நிலையில் நாம் இருந்தாலும், நம்மை வெறுக்காதவர், நம்மை ஒதுக்காதவர், நம்மோடு ஒன்றித்து இருப்பவர் இந்த யேகோவாஷம்மா.

ஆழியைக் கடக்கும் பொழுதும் அவர் நம்மோடு இருக்கிறார். அக்கினியில் நடக்கும் போதும் அவர் நம்முடன் இருக்கிறார். இதைவிட இந்த உலகில் நமக்கு வேறென்ன வேண்டும்.

உங்கள் அன்புக்குரிய கணவரையோ மனைவியையோ, பாசத்துக்குரிய பெற்றோரையோ, மரணத்தினால் நீங்கள் பிரிந்திருக்கலாம். இனி நமக்கு யாருண்டு என்று நீங்கள் ஏங்கலாம். **யேகோவாஷம்மா கூடவே இருக்கிறார்** என்பதை நம்புங்கள். நீங்கள் என்றைக்கும் அனாதை ஆவதில்லை.

நான் சென்னையில் இருந்த பொழுது ஒரு சகோதரி இப்படித்தான் ஜெபிப்பார். எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் அவர் தன்னை திருத்திக் கொள்ளவில்லை. தேவனே வருத்தப்படாத போது நாம் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும் என்று அப்படியே விட்டு விட்டேன்.

அவர் எப்படி ஜெபிப்பார் தெரியுமா? ''ஓ கர்த்தாவே நீர் அனாத தேவன், நீரும் அனாதை, நானும் அனாதை எனக்கு நீர் துணை உமக்கு நான் துணை'' என்று வைராக்கியமாக ஜெபிப்பார். நம்முடைய தேவன் அனாதை தேவனல்ல. அவர் அநாதி தேவன். என்றைக்கும் இருப்பவர் என்று அதற்குப் பொருள். இந்த யேகோவாஷம்மா எப்போதும் நம்மோடு இருக்கிறார் என்பதே நமக்கு தரப்பட்டிருக்கிற அருள்.

முடிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த

இருபத்து மூன்றாம் சங்கீதம் ஒரு சிறிய சங்கீதம் என்று அலட்சியமா– இருக்காதீர்கள். தேவனுடைய முழுமையான பரிமாணத்தைக் காண்பிக்கிற முத்தான சங்கீதம் இஃது, நீங்கள் இதை வாசியுங்கள். திரும்ப திரும்ப சொல்லுங்கள். இந்த யேகோவாஷம்மா இளம் வயதில் உங்களுக்கு நாயகராக, முதிர்வயதில் கரம் பிடித்து நடத்தும் துணையாளராகவும் உங்களோடு இருப்பார்.

உங்கள் பிள்ளைகளை இந்த சங்கீதத்தை வாசிக்கச் சொல்லுங்கள். மனப்பாடமாக சொல்லப் பழக்கி வையுங்கள். இப்படி கர்த்தருடைய நாமத்தை கர்த்தருடைய வார்த்தையை நீங்கள் சொல்லிச் சொல்லி துதித்தால் – ஜெபித்தால் வளருவீர்கள் – வாழ்வீர்கள். நீங்கள் என்றுமே தாழ்ச்சி அடைய மாட்டீர்கள்

முற்றும்.

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**